# உதயன்

விலை ரூபா 6-00

மலர்: 14 வள்ளுவர் ஆண்டு 2029 மார்கழி 27 திங்கட்கிழமை (11-01-1999) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 39


# மண்டேலாவின் மத்தியஸ்தத்தை ஏற்க இலங்கை அரசாங்கம் தயார்?

## தென் ஆபிரிக்க அமைச்சர் விரைவில் கொழும்பு வருவார்

கொழும்பு, ஜனவரி 11

இலங்கை இனப்பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்க தாம் தயாராக இருப்பதாக தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா இலங்கை அரசாங்கத்துக்கு அறிவித்திருப்பதாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதனை ஏற்றுக் கொண்டு விட்டதாகவும் சுயாதீன வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்க அல்லது ஏற்பாட்டாளராகப்பணி புரிய தென் ஆபிரிக்கா உட்பட 15 நாடுகள் தமது விருப்பத்தை இலங்கை அரசுக்குத் தெரிவித்திருந்தன.

இந்த நாடுகளில் தென் ஆபிரிக்காவின் கோரிக்கையையே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக்கொண்டார் என்றும் —

சமீபத்தில் அவர் இந்தியா சென்ற சமயம் பிரதமர் வாஜ்பாயின் சம்மதத்தையும் இதற்குப் பெற்றுக் கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தமது மாவீரர் நாள் உரையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை ஏற்பதற்கு விருப்பம் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு ஆதரவு வழங்க மறுத்தாலும் மூன்றாவது நாடு ஒன்று ஏற்பாட்

(10 ஆம் பக்கம் பார்க்க

## ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சை முடிவு கொழும்பில் இன்று வெளியாகிறது

கொழும்பு, ஜன. 11

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சை முடிவுகள் இன்று வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள் இன்று பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும்—

ஏனைய பாடசாலைகளுக்குரிய முடிவுகள் தபாலில் சேர்க்கப்படும் என்றும் — மேலும் தெவிக்கப்பட்டது.

யாழ், மாவட்டத்துக்கான முடிவுகள் எப்போது எடுத்து வரப்படும் என்ற தகவல் தெரிவிக்கப்படவில்லை.

(இ-3-7)

## 73 ஆயிரம் மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி

கொழும்பு, ஜன. 11

இன்று வெளியிடப்படும் ஜி.சீ.ஈ. (உயர் தர) பரீட்சை முடிவுகளின்படி 73 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சையில் ஒருலட்சத்து 20 ஆயிரம் பேர் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3-7)

## மண் சரிவில் ஒருவர் காயம்

கொழும்பு, ஜன. 11

பதுளை மாவட்டத்தில் நாரந்தல மலைப்பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற மண்சரிவு காரணமாக ஒருவர் படுகாயமடைந்தார்.

மலைச்சாரல் பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவரே இவ்வாறு படு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமைப்பாளரையும் செயலாளரையும் கூட்டணி விரைவில் தெரிவு செய்யும்

கொழும்பு, ஜன. 11

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், மாவட்டச் செயலாளரும்விரைவில்தெரிவு செய்யப்படுவர் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட அமைப்பாளராக இருந்த பொன். சிவபாலனும், மாவட்ட செயலாளராக இருந்த பொன். மதிமுகராஜாவும் படுகொலை செய்யப்பட்டபின்னர் அந்தப்பதவிகள் வெற்றிடமாக உள்ளன.

இந்தப்பதவிகளுக்கு எவரை நியமிப்பது என்பது குறித்து யாழ். மாவட்டக் கட்சிக்குழு கூடி முடிவு செய்யும் என்றும்—

அந்த முடிவு தலைமைப் பீடத்துக்கு அறிவிக்கப்பட்டதும் தலைமைப் பீடம் இறுதி முடிவு எடுக்கும் என்றும்— கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(இ-3-10)

### மாகாண சபைத் தேர்தல்

## வாக்களிப்பை அடுத்து ஊரடங்கு அமுலாகும்

கொழும்பு, ஜன. 11

எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவிருக்கும் வடமேல் மாகாண சபைத் தேர்தல் வாக்களிப்பையடுத்து அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படலாம் என கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நினைவாலயத்தில் நேற்று மலரஞ்சலி

யாழ்ப்பாணம், ஜன, 11

25 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டின்போது உயிரிழந்த பொதுமக்களின் நினைவாக முற்றவெளியில் உள்ள அவர்களது நினைவாலயத்தில் நேற்று மலரஞ்சலி உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

மனித நீதிக்கான போராட்ட அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### சிவகுமாரனுக்குச் சிலை:

## ராணுவ பாதுகாப்பு இன்றி நடந்த அடிக்கல் நடும் விழா

யாழ்ப்பாணம், ஜன. 11

உரும்பிராயில் நேற்று நடந்த பொன். சிவகுமாரனின் சிலை அமைப்புக்கான அடிக்கல் நடும் வைபவத்துக்கு பாதுகாப்பு வழங்க பாதுகாப்புப்படையினர் மறுத்ததாக ஈ. பி. டி. பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தவைபவத்துக்கு பாதுகாப்பு வழங்க படையினர் அங்கு சென்றிருந்தனர்.

வைபவத்தை ஏற்பாடு செய்தவர்களுடன் அந்தபடை அணியின் பொறுப்பதிகாரி பேசிய சமயம், இருதரப்புக்கும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## 3 புலி உறுப்பினர்கள் வெடிவிபத்தில் உயிரிழப்பு

வவுனியா, ஜன. 11

வன்னியில் கடந்த 8 ஆம் திகதி தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்து ஒன்றில் களப்படப்பிடிப்பாளர் உட்பட மூவர் உயிரிழந்தனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

களப்படப் பிடிப்பாளரான தமிழ்வாணன் (மகாலிங்கம் சுபாஸ்கரன் — திருகோணமலை), மாருதயன் (செல்வரத்தினம் அகிலேசன் — பூநகரி), கேசவன் (சின்னத்தம்பி கேதீஸ்வரன் — கிளிநொச்சி) ஆகியோரே உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 7 ஆம் திகதி முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடற்படையினருடன் இடம்பெற்ற கடற்சமரில் ஈழவாணன் (சிவனேந்திரன் கவிவேந்தன் — கிளிநொச்சி) என்பவரும் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3-க)

## பஸ் ஊழியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு

கொழும்பு, ஜன. 11

வடபிராந்திய போக்குவரத்துச் சபை மற்றும் கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவை வழங்கவேண்டும் என்று மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் றமால் ஸ்ரீவர்த்தனா போக்குவரத்து அமைச்சுச் செயலாளருக்கு சிபார்சு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரூ. 1,000 போலி நோட்டு இரு இளைஞர்கள் கைது

கொழும்பு, ஜன. 11

போலியான ஆயிரம் ரூபாத்தாள்கள் இரண்டை மாற்ற முயன்ற இரு இளைஞர்கள் நுவரெலியாவில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் விசேட கணனித் தொழில்நுட்பத்தைப் பயின்ற கணனித்துறை நிபுணர் ஒருவரும் கைதானவர்களில் ஒருவர் என்றும்—

இந்த நபரின் உதவியுடன் மற்றைய இளைஞர் இதுவரை 10 இலட்சம் ரூபா பெறுமதியான பண நோட்டுக்களை அச்சிட்டுள்ளார் என்றும்— விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இவர்களின் தகவலின் பேரில் திருவையில் உள்ள வீடு ஒன்றைச் சோதனை செய்து 35 போலி நோட்டுக்களைக் கைப்பற்றியதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (இ-3-க)

# மிதிவெடியில் சிக்கிய இளைஞன் கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 11

தோட்ட வேலைக்குச் சென்ற இளைஞன், அத் தோட்டத்தில் இருந்த மிதி வெடியில் சிக்குண்டு வலது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்து படுகாயமடைந்தார்.

புலோலி தெற்கு மந்திகை கரம்பொன் தோட்டப் பகுதியில் நேற்று நண்பகல் 12.45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் புலோலி தெற்கைச் சேர்ந்த கந்தையா யோகராசா (வயது 22) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இராணுவ பாதுகாப்பரண் பகுதிக்குள் கடந்த இரு வருடங்களாக பயிர்ச் செய்கை இன்றி இருந்த இத்தோட்டம் தற்போது பயிர்ச் செய்கைக்கு அனுமதிக்கப்பட்டதை அடுத்து தமது தோட்டத் திருத்த வேலைக்குச் சென்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றது.

பயிர்ச் செய்கைக்கு அனுமதிக்கப்பட்டதை அடுத்து இத்தோட்டப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினரால் மிதிவெடி அகற்றும் பணி இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

படுகாயமடைந்தவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

(இ-15-109-139)

# தீர்வுயோசனை ஓரிரு மாதங்களில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்!

## ஜனாதிபதி நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜன. 11

''அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வு யோசனைகள் அடுத்த ஓரிரு மாதங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்''

இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

பண்டுவஸ்நுவரவில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

இனநெருக்கடிக்குத் தீர்வு காணும் அரசின் முயற்சிகளுக்கு எதிர்க்கட்சி ஒத்துழைப்பு வழங்காமல் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறது. நாம் இனியும் எதிர்க்கட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை.

தீர்வு யோசனைகளை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது, மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காது விட்டால் மாற்று வழியின்மூலம் முயற்சிகளை மேற்கொள்வோம்.

நீண்டகாலமாக ஏமாற்றப்பட்ட தமிழ் மக்களின் இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வு காணப்பட்டே ஆகவேண்டும்.

தமிழ் மக்கள் நீண்ட காலமாக ஏமாற்றப்பட்டுவந்துள்ளமையை எவராலும் மறுக்க முடியாது.

இனப்பிரச்சினையைக் காரணங்காட்டி தமிழ் இளைஞர்களில் ஒரு சிறு குழு மேற்கொண்டு வரும் பயங்கரவாதத்தை அனுமதிக்க முடியாது. அதனை நாம் எமது பலத்தைக் கொண்டு முறியடித்தே தீருவோம்.

இப்படி ஜனாதிபதி கூறினார்.

(இ-3-10)

## பிற்போடப்பட்டுள்ளது

**19 - 10 - 98** அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த கரவை சுடர் விளையாட்டுக்கழக அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் **15 - 01 - 99** தைப்பொங்கல் அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

**நிர்வாகம்,**
**கரவை சுடர் வி. க.,**
**கரவெட்டி.**

(62079)

## கண்ணீர் அஞ்சலி

**எமது சக உத்தியோகத்தர்**
**திரு. ப. மகேந்திரதாசன்**
**அவர்களின் அன்புத் தந்தையார்**

### சின்னத்தம்பி பத்மநாதன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**காரியாலய உத்தியோகத்தர்கள்,**
**ஊழியர்கள்.**

**போதனா வைத்தியசாலை.**
யாழ்ப்பாணம்.

(சி/6103)

## அறிவித்தல்

வட மாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்க் கோவிற்பற்று திருநெல்வேலி இறையில் அமைந்துள்ள ''வேதர்வளவும், கூழாவடியும், தாண்டியாவளவும், கந்தர் கிணற்றடியும்'' நி.ப ர.(1) ஒன்று குழி(17.29) பதினேழுதசம் இரண்டு ஒன்பதும், வீடும், பயிர்வகைகளும், களஞ்சியக்கட்டடமும், கிணறும், என்னும் ஆதனத்துக்கு, நான், 1972 ஆம் ஆண்டு தை மாதம் 21 ஆந் திகதி நொத்தாரிஸ் சி. விசுவலிங்கம் அவர்கள் முன்பாக 12145 ஆம் இலக்கத்தில், நிறைவேறிய சீதன உறுதிப்படி, சொந்தமுடையவராவேன். குறித்த ஆதனத்தை நான், தவணை அறுதி உறுதி மூலமும், ஒற்றி ஈடு மூலமும், குப்பிழான், விசுவலிங்கம் சுகுமாரன் பெண் ஞானதேவி என்பவருக்கு, எழுதிக் கொடுத்த உறுதிகள் சம்பந்தமாக, எனக்கும், குறித்த விசுவலிங்கம் சுகுமாரன் பெண் ஞானதேவிக்கும் இடையே, இலங்கைக் கடன் இணக்க சபையில், க. இ. ச. /37863 ஆம் இலக்கத்தில் ஒரு வழக்கு விசாரணை, 17 - 02 – 1999 ஆந் திகதியன்று, விசாரணைக்கு எடுபடவுள்ளதென்றும், குறித்த ஆதனத்தை மேற்குறித்த விசாரணைத் திகதிக்கு முன்பாக, மேற்குறித்த ஞானதேவி என்பவர், அறுதி விற்பதற்கு முயற்சிப்பதாகவும், எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. ஆகவே மேற்குறித்த விசாரணை முடிவடைவதற்கு முன்பாகக் குறித்த ஆதனத்தை எவரும், அறுதி வாங்க வேண்டாம் என்று, நான் இவ்வறிவித்தல் மூலம், எச்சரிக்கை செய்கின்றேன். இதை மீறி குறித்த ஆதனத்தை அறுதி வாங்குபவர்களுக்கு, ஏற்படப் போகும் நட்டங்களுக்கு, நான் பொறுப்பாளி இல்லை என்பதையும் இத்தால் சகலருக்கும் அறிவிக்கின்றேன்.

**த. பரமேஸ்வரி**

**சுப்பிரமணியம் தம்பிராசா,**
**பெண் பரமேஸ்வரி.**
திருப்பதி தாழையடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

மேற்குறித்த விவரங்கள் சரியானவையென்று உறுதிப்படுத்துகின்றேன்.

**எஸ். கனகரட்ணம்**
சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்.

(62078)

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன 11

அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தில் பொங்கல் விழா எதிர்வரும் 15ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

பொங்கல் விழாவை முன்னிட்டு சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் சரபந்தாட்டப் போட்டியும் நடைபெறும். (இ-15)

## தவறிவிட்டது

முருகையா கௌசலா என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன கடந்த சில தினங்களுக்கு முன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் முருகையா கௌசலா தெல்லிப்பளை கிழக்கு, துர்க்காபுரம் எனும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

தகவல்:-

**ஜெயரட்ணம்.**

தெல்லிப்பழை.

(62080)

## ஒப்பந்தம் குறித்து வர்த்தகர்கள் அதிருப்தி

கொழும்பு, ஜன. 11

அண்மையில இந்தியாவுக்கும் — இலங்கைக்கும் கைச்சாத்தான வர்த்தக ஒப்பந்தம் குறித்து வர்த்தகர்கள் மத்தியில் அதிருப்தி உணர்வுகள் ஏற்பட்டிருப்பதாகக் கொழும்புப் பத்திரிகைகளை மேற்கோள் காட்டி பி.பி.ஸி. செய்தி வெளியிட்டுள்ளது.

மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அண்மையில் இந்தியா சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வர்த்தக உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டிருந்தது தெரிந்ததே.

இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களான தேயிலை, இறப்பர், தேங்காய் மற்றும் பொருள்கள் மேற்படி உடன்படிக்கையில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

மேற்படி ஒப்பந்தம் குறித்து உயர்நிலை வர்த்தகர்களுடன் கலந்தாலோசிக்கவில்லை எனவும்—இதனாலேயே குறிப்பிட்ட உடன்படிக்கை குறித்து வர்த்தகர்கள் மத்தியில் அதிருப்தி நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## விபத்துக்களில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 11

வடமராட்சி வல்லை வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பஸ் - சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவத்தில் சைக்கிளில் சென்றவரே காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் ஒரு வியாபாரியாவார். அவரது பெயர் விவரங்கள் எதுவும் தெரியவரவில்லை.

நேற்று இடம்பெற்ற மற்றுமொரு மோட்டார் சைக்கிள் விபத்தில் சரசாலையைச் சேர்ந்தவரும், யாழ். போதனா வைத்தியசாலை சிற்றூழியருமான ப. செல்வராசா என்பவர் காயமடைந்தார்.

பஸ்ஸில் ஏறுவதற்காக சென்றவேளை அவ் வீதியால் வந்த மோட்டார் சைக்கிளே இவரை மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## ஒன்றுகூடல்

சங்கானை, ஜன. 11

வலிமேற்கு சங்கானை பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினரால் நடத்தப்படும் ஒன்றுகூடல் நிகழ்ச்சி இன்று காலை 9.00 மணிக்கு பிரதேச செயலாளர் கா. சந்திரராசா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் உட்பட பல திணைக்களத் தலைவர்களும் கலந்து கொள்வர். (இ-29)


**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
ஞாயிறு முதல்
**முத்துராமன், தேவிகா**
நடித்த
**நெஞ்சில் ஓர் ஆலயம்**
காட்சிகள்;- 10.30, 2.30
T. P. No. **070–212223**
(62006)

**ராஜா**
யாழ்ப்பாணம்.
**நெப்போலியன், நாசா**
**தேவயானி, மணிவண்ணன்**
நடித்த
**கிழக்கும் மேற்கும்**
இரண்டாவது வாரம்
10-30, 2-00, 5-00
[சி/5958]

**நாகம்ஸ்**
**சினிமா**
**சுன்னாகம்.**
**அஜித், தேவயானி**
நடித்த
**காதல்கோட்டை**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 10-30, 2-30
(62066)


## மரண அறிவித்தல்

### சுவாம்பிள்ளை ஞானசைப்பிள்ளை

இளவாலையைப் பிறப்பிடமாகவும் 177/1, ஆஸ்பத்திரி வீதியை (தொடர்பகம் அருகில்) வசிப்பிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை ஞானசைப்பிள்ளை (இளைப்பாறிய சிமெந்துக் கூட்டுத்தாபன பிரதம லிகிதர்) 09—01—99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மக்டலினின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களாகிய திருமதி றோசம்மா மனுவேற்பிள்ளை, அ. அந்தோனிப்பிள்ளை (I.P, C.I.D), இராசம்மா மரியாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி ஞானரத்தினம் ஆனந்தராஜா (ஆசிரியர் றோ.க. பாடசாலை, மிருசுவில்), திருமதி மேரி அக்னஸ் அருள்நேசன் (லண்டன்), அன்ரன் (Holland), திருமதி மேரி திரேசா அன்ரனிராஜன் ஆகியோரின் தகப்பனாரும், இ. ஆனந்தராஜா (மக்கள் வங்கி Kayts), அ. அருள்நேசன் (லண்டன்), அ. அன்ரனிராஜன் (விரிவுரையாளர், புவியியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனாரும், செல்வி. தே. மனுவேற்பிள்ளை (ஆசிரியர் யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்), ம. நியூட்டன் ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் திங்கள் (11-01-99) மாலை 3. 00மணிக்கு அடைக்கலமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**திருமதி அ. மேரி திரேசா (சாந்தி)** (மகள்)
**செல்வி தே. மனுவேற்பிள்ளை.** (மருமகள்)
177/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(62076)

# வலி. மேற்கு மக்களின் வாழ்வு நிலை குறித்துசெஞ்சிலுவைகளநிலைஆய்வு

மூளாய், ஜன. 11

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் நாளாந்தம் பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு களநிலையிலான ஆய்வு ஒன்றை மேற் கொள்ளவுள்ளது.

மேற்படி பகுதிகளில் வாழும் மக்கள் தமது தினசரி வாழ்வில் எதிர்நோக்கும் நெருக்கடிகள், பிரச்சினைகள் போன்றவற்றைக் கண்டறிவதும் அவற்றை நீக்குவதற்கு பொதுமக்கள் வழமையாகக் கையாளும் வழிவகைகள் குறித்தும் கண்டறியப்படும்.

நாளை மறுதினம் ஆரம்பமாகவிருக்கும் இந்த ஆய்வு ஒரு மாதகாலம்வரை நீடிக்கும் என்று தெரியவருகிறது. செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரிகள் கிராம ரீதியாக அமைக்கப்பட்ட நிலையங்களுக்கு பொது மக்களை அழைத்து அவர்களை ஆய்வுக்குட்படுத்தவுள்ளனர்.

இந்த ஆய்வின் இறுதியில் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு அது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வதிவிடப் பிரதிநிதியின் கவனத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-99)

## இளைஞர்களின் பிரச்சினை:

# இளைஞர் சேவை மன்றம் தகவல் சேகரிக்கிறது

மூளாய், ஜன. 11

யாழ். குடாநாட்டில் வாழும் இளைஞர், யுவதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தகவல் சேகரித்து வருகிறது.

யுத்தச் சூழல், அரசியல் நெருக்கடிகள் மற்றும் அன்றாடப் பிரச்சினைகள் மத்தியில் யாழ் குடாநாட்டில் வாழும் இளைஞர், யுவதிகள் வேறு பல பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றனர். இவ்வாறு நீண்ட காலமாக எதிர்நோக்கப்பட்டு வரும் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு பல்வேறு த்ரப்பினரும்பல ஆலோசனைகள் கூறி வருகின்றனர்.

இந்த நிலையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இவ்விடயம் குறித்து விரிவான தகவல் திரட்டும் முயற்சியில் இறங்கியுள்ளது. இவ்வாறு திரட்டப்படும் தகவல்களின் அடிப்படையில் பூரண விவரங்கள் அடங்கிய அறிக்கையொன்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் தயாரிக்கப்படவுள்ளது.

(ஐ-99)

## முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 11

தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் யாழ். இந்துக் கல்லூரி நிலையத்தில் கல்வி டிப்புளோமா கற்கை நெறியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம், 30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக மேற்படி நிலையத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த. வில்வநாதன் அறிவித்துள்ளார்.

(தி-7)

# கோப்பாய்ப் பகுதியில் மின் இணைப்பு வேலை

கோப்பாய், ஜன. 11

கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளுக்கு மின்சாரத்தை விநியோகிக்கும் நோக்குடன் பருத்தித்துறை வீதியில் மின் இணைப்பு வேலைகளில் மின்சார சபையினர் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதிகளில் கடந்தகால அனர்த்தங்களினால் பெருமளவிலான மின் கம்பங்கள் சேதமுற்றிருந்தன. இதனால் பழைய மின்கம்பங்கள் யாவும் அகற்றப்பட்டு புதிய மின் கம்பங்கள் நடப்பட்டு அவற்றில் மின் கம்பிகள் இணைக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதிகளில் அரசினர் வைத்தியசாலை, பிரதேச செயலகம் மற்றும் பல அலுவலகங்கள் உள்ளன.

இதுவரை இப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

(ஐ-72)

## 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

வேலணை, ஜன. 11

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுமார் 320 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்வு கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபாவுக்குரிய காசோலைகள் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் —

இக்கொடுப்பனவுக்குரியவர்கள் வங்கிகளில் சென்று பணத்தினைப்பெற்றுக்கொள்ளலாம் என்றும் —

வேலணை பிரதேச செயலர் செ. இரத்தினம் தெரிவித்துள்ளார்.

(ஐ-ரீ)

## கிணறு அமைப்பு

தென்மராட்சி, ஜன. 11

பளை இத்தாவில் மொண்வொன் வைரவர் கோயிலில் பளைப் பிரதேச செயலகத்தினால் 50 ஆயிரம் ரூபா செலவில் புதிய கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தின் கடந்த ஆண்டுக்குரிய பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் மூலம் இக் கிணறு அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## ஈவினை ஆலயம் புனரமைப்பு

புன்னாலைக்கட்டுவன், ஜன. 11

ஈவினைப் பிள்ளையார் கோயில் பாலஸ்தானம் செய்யப்பட்டு கட்டட வேலைகள் நடைபெறுகின்றன. கடந்த காலங்களில் ஏற்பட்ட சேதத்தைத் திருத்தும் முகமாகவே இவ்வாறு கோயில் பாலஸ்தானம்செய்யப்பட்டுள்ளது. இத் திருத்தப்பணிக்கு பொதுமக்கள் நிதியுதவி, பொருள் உதவி செய்து வருகின்றார்கள்.

(ஐ-133)

# கடற்கன்னி வடிவில் குழந்தை

தென் இலங்கையின் காவத்த என்ற இடத்தில் கடந்த வெள்ளியன்று அபூர்வமான குழந்தை ஒன்று இறந்து பிறந்தது.

கடற்கன்னி வடிவில் இந்தக் குழந்தை காணப் படுவதாகவும்—

இக்குழந்தையை பார்ப்பதற்காக நூற்றுக்கணக்கானோர் காவத்த பகுதிக்கு சென்று வருவதாகத் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

## பஸ்ஸிலிருந்து தவறிவிழுந்து காயம்

யாழ்ப்பாணம், ஜன. 11

ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸிலிருந்து தவறிவிழுந்து ஒரு பெண் காயமடைந்தார்.

மானிப்பாய், கட்டுடைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மைக்கேல் இராஜேஸ்வரி (வயது 68) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-15)

# ஆரம்ப பிரிவு மாணவருக்குக் கற்பிக்க பட்டதாரிகள் முன்வர வேண்டும்

## கல்விப் பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 11

பட்டதாரி ஆசிரியர்கள் ஆரம்பபிரிவுமாணவர்களுக்கு கற்பிக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு யாழ். வலய கல்விப் பணிப்பாளர் கலாநிதி ந. தணிகாசலம்பிள்ளை, யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற ஆரம்ப பிரிவு மாணவர்களின் கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் க.இராசதுரை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

யாழ். மாவட்டத்தில் கல்வித்துறையைப் பொறுத்தவரையில் இரு முரண்பட்ட நிலைகள் காணப்படுகின்றன ஆரம்பபிரிவுமாணவர்களுக்கு கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. அதேவேளை பட்டதாரி ஆசிரியர்கள் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு கற்பிப்பதனை ஒரு அகௌரவமாக கருதுகிறார்கள்.

மேலைத் தேசங்களில் ஆரம்பக் கல்வி தொடர்பாக ஆய்வு செய்து கலாநிதி பட்டம் பெற்றவர்களே ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

பட்டதாரிகளின் தவறான கணிப்பினால்தான் இங்கே ஆரம்ப கல்வி கீழ்மட்டத்துக்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை யாழ். மாவட்டத்தில் முற்றுமுழுதாக மபற்றியமைக்கப்பட வேண்டும்.

பட்டதாரி எந்தந் தொழிலும் செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

நியமனம் பெறும்போதே தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கும் திட்டத்தை அடிப்படையாக வைத்து நகரப்புறங்களிலும் வீட்டிற்கு அருகிலும் பாடசாலைகளை கோரி நிற்கும் பட்டதாரி ஆசிரியர்களின் சிந்தனைமாற வேண்டும் அல்லது மாற்றப்படவேண்டும்.

எந்த இடத்துக்கும் சென்று கற்பிக்கும் மனோநிலை எவரினாலும் வலியுறுத்தி ஏற்படக்கூடாது.

ஒவ்வொருவரும் தங்களது மனச் சாட்சிப்படி செயற்படவேண்டும்.

மக்களின் வரிப் பணத்தில் படித்து பட்டம் பெற்று மக்களின் வரிப்பணத்தில் சம்பளத்தையும் பெற்றுக் கொண்டு சீதனச் சந்தையில் தம்மை உயர்ந்தவர்களாக வைத்துக் கொள்ளும் நிலை மாற்றப்படவேண்டும். நிலையான மனவிடுதலையே எமது ஏனைய விடுதலைகள் எல்லாவற்றுக்கும் காரணம்.

இப்படி அவர் கூறினார்.

(இ-5)

## பாடசாலைக்குப் புதிய கட்டடம்

மூளாய், ஜன. 11

பனிப்புலம் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் நுண் கருத்திட்டத்தின் கீழ் இக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது.

(ஐ-99)

## 500 பாய்கள் விநியோகம்

தென்மராட்சி. ஜன. 11

வன்னியிலிருந்து தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கவென 'யுனிசெவ்' நிறுவனம் 500 பாய்களை பளைப் பிரதேச செயலகத்துக்கு வழங்கியுள்ளது.

பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு இப் பாய்கள் விநியோகிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே 'யுனிசெவ்' நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட பாய்கள் கிளாலி, பளை, முகமாலை ஆகிய பகுதிகளில் உள்ள முகாம்களில் தங்கியிருப்போருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-117)

# கைதடிப் பகுதியில் கசிப்பு வேட்டை

கைதடி, ஜன. 11

கைதடி கிராமத்தில் நீண்ட நாள்களாக இடம் பெற்று வந்த கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையை படையினர் தடை செய்துள்ளனர்.

பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க கசிப்பு உற்பத்தி செய்யும் இடங்களைச் சுற்றி வளைத்த படையினர் கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்கள் மற்றும் காய்ச்சிய கசிப்பு என்பவற்றைக் கைப்பற்றி அழித்துள்ளனர்.

திடீர்ச் சோதனைகளின் மூலம் கசிப்பு விற்பனையாளர்களையும் கைது செய்து அவர்களை எச்சரிக்கை மூலம் விடுவித்துள்ளனர்.

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையைக் கைதடியில் இல்லாதொழிக்கும் நடவடிக்கையில் இப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் படையினர் கடந்த சில நாள்களாக தீவிரமாக ஈடுபட்டு வந்தனர்.

படையினர் எடுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து இப்பகுதியில் மேற்படி உற்பத்தியும் விற்பனையும் தடுக்கப்பட்டுள்ளன.

(ஐ-5-74-17)

## சத்துணவும் மாதாந்த வேதனமும்

யாழ்ப்பாணம், ஜன. 11

காரைநகர் வேதரடைப்பு முன் பள்ளி மாணவர்களுக்கு சத்துணவும், பள்ளி ஆசிரியைக்கு மாதாந்த வேதனமும் வழங்குவதற்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி) தீர்மானித்துள்ளது.

ஈ.பி.டி.பி யின் காரைநகர் பொறுப்பாளர் ரஜனியின் வேண்டுகோளின் பேரில் இதற்கான நிதி கட்சியினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கட்சியின் தீவக அமைப்பாளர் எஸ் மனோகரன் தெரிவித்தார்.

(இ-5)

## ஒன்றுகூடல்

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் இன்று திங்கட்கிழமை பிரதேச செயலகத்தின் மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்ச்சியை பிரதேச செயலக நலன் புரிச்சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

## கட்டடத் திறப்பு விழா ஏற்பாடு

வேலணை, ஜன. 11

வேலணைப் பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நிகழ்வு மிக விரைவில் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது,

இவ் விழா தொடர்பான ஒழுங்குகளை மேற்கொள்ளுவதற்கென பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சனசமூக நிலையங்கள், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள், கடற்றொழிலாளர்கள் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளினுடனான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் வேலணைப்பிரதேசசெயலகத்தில் நடைபெறவிருப்பதாகப் பிரதேச செயலர் செ. இரத்தினம் தெரிவித்துள்ளார்.

(ஐ-ரீ)

# 200 குடும்பங்களுக்கு 'யுனிசெவ்' உதவி

புன்னாலைக்கட்டுவன், ஜன. 11

இடம்பெயர்ந்து வன்னி சென்று மீண்டும் மீளக் குடியமர்ந்த வறிய மக்களுக்கு 'யுனிசெவ்' அமைப்பினால் பொருள் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கிராமசேவகர் பிரிவில் 10 குடும்பங்களுக்கு உணவு சமைக்கும் பாத்திரங்களும், 50 பாய்களும்—

புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராமசேவகர் பிரிவில் 50 பாய்களும், 10 குடும்பங்களுக்கான உணவு சமைக்கும் பாத்திரங்களும்—

ஈவினைப் பிரதேசத்திற்கு 100 பாய்களும், 10 குடும்பங்களுக்கான உணவு சமைக்கும் பாத்திரங்களும் வழங்கப்பட்டன.

இடம்பெயர்ந்து வன்னி சென்று திரும்ப மீளக்குடியமர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சுமார் 200 குடும்பங்கள் இந்த உதவிகளைப் பெற்றன.

(ஐ-133)

## சீடா உதவி

கோப்பாய், ஜன. 11

கோப்பாய், நீர்வேலி பகுதி விவசாயிகளில் தெரிவு செய்யப்பட்ட பத்து விவசாயிகளுக்கு சீடா நிறுவனம் கடன் அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்கவுள்ளது.

(இ-7-2)

## ஆறு பேரை விசர் நாய் கடித்தது

உடுப்பிட்டிச் சந்தியில் ஒரே நாளில் ஆறு பேர்கள் விசர்நாயினால் கடியுண்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் உடுப்பிட்டிச் சந்தியில், கட்டாக் காலியாகத் திரிந்த விசர்நாயே அப்பகுதியால் சென்றவர்களில் ஆறு பேரைக் கடித்தது.

இவர்களில் உடுப்பிட்டி இலக்கணாவத்தையைச் சேர்ந்த நல்லநாதன்- தவறஞ்சன் (வயது 22) என்பவர் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். ஏனைய ஐவரும் வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைக்குச் சென்றுள்ளனரெனத் தெரியவருகிறது. (ஐ-109)

# செக்கோஸ்லேவாக்கியாவில் 200 இலங்கையர்கள் கைது!

கொழும்பு, ஜன. 11

சட்ட விரோதமான முறையில் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் வழியில் செக்கோஸ் லேவாக்கியாவில் தங்கியிருந்த சுமார் 200 இலங்கையர்கள் கடந்த வாரம் அந்நாட்டுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட இவர்களிடம் பயணத்துக்கான எவ்வித ஆவணங்களும் இருக்கவில்லை என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

மேற்படி இலங்கையர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் வகையில் அங்கு தங்கி இருந்ததுதெரியவந்துள்ளதாக செக்கோஸ்லேவாக்கியபொலீஸார் தெரிவித்தனர்

வெளிநாடுகளில் இருந்து வந்து சட்ட விரோதமாக செக்கோஸ்லேவாக்கியா வில் தங்கியிருப்போரைத் தேடிக் கண்டுபிடிக்கும் ஒரு நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. கைது செய்யப்பட்ட இலங்கையர்களில் 20 இற்கும் மேற்பட்டவர்கள் சிங்கள இனத்தவர் என்றும் எஞ்சியோர் அனைவரும் தமிழர்கள் என்றும் அவர்களில் பெண்களும் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

செக்கோஸ்லேவாக்கியாவில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னரும் இலங்கையர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் அரசியல் புகலிடம் கோரியதை அடுத்து விடுவிக்கப்பட்டனர். (ஐ-10)

## அறநெறிப் பாடசாலை

கோப்பாய். ஜன. 11

கோப்பாய்ச் சந்தியில் உள்ள அருள்மிகு முருகன் ஆலயத்தில் அறநெறிப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆலய நிர்வாகத்தினரால் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் பலமாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். (ஐ-72)

## ஊறணி - பருத்தித்துறை பகுதிக்கு விரைவில் மின்

வல்வெட்டித்துறையிலுள்ள ஊறணியிலிருந்து, பருத்தித்துறை வரைக்கும் மின் விநியோகம் மிக விரைவில் வழங்கப்படவிருக்கின்றது.

இதன் முதற் கட்டமாக இப்பகுதிகளில், பழுதடைந்த மின் கம்பங்கள் அகற்றப்பட்டு, புதிய மின்கம்பங்கள் நடப்பட்டு வருவதுடன், மின்கம்பிகள் செப்பனிடும் பணியும் இடம்பெற்று வருகின்றன. (ஐ-109)

## நஞ்சூட்டிக் கொலை

மந்திகை மருத்துவமனை வளவில் கட்டாக்காலிகளாகத் திரிந்த 25 நாய்கள் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் கடந்த வெள்ளிக்கிழமை நஞ்சூட்டிக் கொல்லப்பட்டன. (ஐ 109)

## திரிபோஷா விநியோகம்

நெல்லியடி, ஜன. 11

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனைக்கு 780 பைக்கற் திரிபோஷா மா வழங்கப்பட்டுள்ளன.

இவை சிகிச்சை நிலையங்களூடாக, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படுமென வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் தெரிவித்தார். (ஐ-109)

## ஒலிபெருக்கிச் சாதனங்கள் ஆலயத்தில் திருட்டு

### சந்தேகநபர் சிக்கினார்

கொக்குவில், ஜன. 11

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை இரவு திருட்டு நடைபெற்றது. ஆலய உண்டியல் பெட்டி உடைக்கப்பட்டு பணம் சூறையாடப்பட்டதுடன் தேர்முட்டியில் கட்டப்பட்டிருந்த மூன்று ஒலிபெருக்கிகளின் பின்பகுதிகள் (யுனிற்கள்) திருடப்பட்டுள்ளன.

இத்திருட்டில் ஈடுபட்டதாகச்சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் அதிகாலை 5.30 மணியளவில் திருநெல்வேலி சந்தியில் உள்ள தேநீர்க்கடை ஒன்றில் வைத்து பொதுமக்களால் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டார்.

மேற்படி தேநீர்க் கடையில் தேநீர் அருந்திவிட்டு அந்நபர் வெளியேறுகையில் அவரிடமிருந்து பெரும் தொகைச் சில்லறைநாணயங்கள் தரையில் வீழ்ந்தன. செவ்வாய்க்கிழமை இரவு கொக்குவில் கோணாவளை ஸ்ரீசாயி துர்க்காதேவி ஆலயத்திலும் திருட்டு நடைபெற்றமையால் உசார் நிலையில் இருந்த அப்பகுதி மக்கள் அந்த நபரைச் சோதனை செய்தனர். அவரிடம் இருந்த உரப்பையில் இருந்துமூன்று ஒலிபெருக்கி யுனிற்களும் பிடிபட்டன. திருடன் அவற்றை மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் திருடியதாக ஒப்புக்கொண்டார். பின்னர் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் அவர் ஒப்படைக்கப்பட்டார். (ஐ-ரீ-86)

## சிறுவனின் மோதிரத்தை அபகரித்த இளைஞர்

பாலர் பாடசாலை கலை விழாவுக்கு, தனியே சென்றுகொண்டிருந்த ஐந்து வயதுச் சிறுவனை வழிமறித்து இனந்தெரியாத இளைஞர், சிறுவன் அணிந்திருந்த மோதிரத்தைப் பறித்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் மந்திகையிலுள்ள துன்னாலை இந்திரம்மன் கோயிலடியில் இடம்பெற்றது

இப் பகுதியிலுள்ள மித்திரன் பாலர் பாடசாலையில் பாலர் வகுப்பில் படிக்கும் கதிரவேற்பிள்ளை-அருண்பிரசாத் (வயது 5) என்னும் சிறுவனிடமிருந்தே, மோதிரம் அபகரித்துச் செல்லப்பட்டது. (ஐ-109)

## கிராம அலுவலர் இடமாற்றம்

நெல்லியடி, ஜன. 11

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இரு கிராம சேவை அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஆவரங்கால் மேற்கு கிராம சேவை அலுவலர் எஸ். துரைராஜா அச்சுவேலி தெற்குப் பிரிவுக்கும், அச்சுவேலி தெற்குப் பிரிவு கிராம சேவை அலுவலர் இ. கணேசலிங்கம் ஆவரங்கால் மேற்குப் பிரிவுக்கும் கடந்த முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ஐ-109)

## தபாற் பெட்டி விஷமிகளால் சேதம்

புன்னாலைக்கட்டுவன், ஜன. 11

புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலைக்கு முன்னால் பலாலி வீதியில் அமைந்துள்ள தபாற்பெட்டி விஷமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது. தபாற்பெட்டியின் முன்பக்கக் கதவு கழற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

ஏற்கனவே புன்னாலைக்கட்டுவன் சந்தியில் உள்ள சிமெந்தால் கட்டப்பட்ட பெரிய தபாற்பெட்டி சேதமாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ-133)

## பாலர் பாடசாலைக் கட்டடவேலை பூர்த்தி

தென்மராட்சி, ஜன. 11

'யுனிசெவ்' நிறுவனமும் பளைப் பிரதேச சபையும் இணைந்து பளைப் பிரதேச சபை வளவில் 80 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணித்த பாலர் பாடசாலைக் கட்டடம், மல கூடம் ஆகியவற்றின் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இக் கட்டடங்கள் இம் மாத இறுதியில் திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பளைப்பிரதேசசபையினால் நடத்தப்படும் பாலர் பாடசாலைப் புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக் கட்டடம் அமைக்க 'யுனிசெவ்' நிறுவனம் 62 ஆயிரம் ரூபாவும்—

பிரதேசசபை 23 ஆயிரம் ரூபாவும்— வழங்கியிருந்தன. (ஐ-117)

# இந்திய-பாக். கிரிக்கெட் ஆட்டத்தொடரைக்கைவிடுக!

### இந்திய அணித் தலைவர் அஸாருதீன்

புதுடில்லி, ஜன. 11

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் விளையாடமுடியாதவாறு பதற்றமான சூழல் நிலவுவதால் இந்திய— பாகிஸ்தான் ரெஸ்ட் கிரிக்கெட் தொடரை கைவிடவேண்டும்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் அஸாருதீன் உட்பட சிரேஷ்ட கிரிக்கெட் வீரர்கள் பலர் மேற்கண்டவாறு கருத்துக் கூறி உள்ளனர்.

ஆனால் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் விளையாட முன்வராத வீரர்கள் உலகக் கிண்ணப் போட்டிக்கு அனுப்பப்படமாட்டார்கள் என்று இந்திய கிரிக்கெட் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை —

பாகிஸ்தான் அணியின் பாதுகாப்புக் குறித்து அந்நாட்டு கிரிக்கெட் சங்கத்தின் பிரதிநிதிகள் எதிர்வரும் 14 ஆம் திகதி புதுடில்லி வந்து இந்திய மத்திய உள்துறை செயலரைச் சந்தித்து பேச்சு நடத்த உள்ளனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி விளையாட இருந்த புதுடில்லி மைதானத்தின் ஆடு களத்தை சிவசேனை உறுப்பினர்கள் சேதப்படுத்தியமை தெரிந்ததே.

இதனையடுத்து இரண்டாவது போட்டி நடைபெறவுள்ள சென்னை சேப்பாக்கம், சென்னை சிதம்பரம் ஆடுகளங்களைப் பாதுகாக்கும் பணியில் பொலீஸார் 24 மணி நேரமும் ஈடுபட்டுள்ளனர். (ஐ-க-10)

## கொலம்பியாவில் அரசு-புரட்சி இராணுவம் பேச்சுவார்த்தை ஆரம்பம்

40 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட கொலம்பியாவின் இராணுவ சூனியப் பிரதேசத்தில் கொலம்பிய ஜனாதிபதி என்ரஸ் பஸ்ட்ரானாவுக்கும், கொலம்பிய புரட்சி இராணுவத்தின் தலைவர்களுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி உள்ளன.

கொலம்பியாவில் சுமார் 30 வருடகாலமாக அரசுப் படைகளுக்கும், புரட்சி இராணுவத்துக்கும் இடையே சண்டை நடைபெற்று வருகிறது.

நாட்டின் சமாதானத்தை உருவாக்குவதற்கும், இயல்பு நிலையை ஏற்படுத்தவும் பேச்சு நடத்த இரு தரப்பினரும் இணங்கியதை அடுத்து பேச்சுவார்த்தை ஆரம்பமாகி உள்ளது.

## இந்து தலைவர் காஷ்மீரில் கொலை

ஸ்ரீநகர், ஜன. 11

இந்து தீவிரவாத அமைப்பு ஒன்றின் தலைவர் காஷ்மீரில் சுட்டுக் கொல்லப்படிருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

பால் தக்கரேயின் கட்சியைச் சேர்ந்த இவர் ஜீப்பில் சென்று கொண்டிருந்தபோது சுடப்பட்டார். இவரதுமெய்ப் பாதுகாவலரும் சுட்டுக் கொல்லப்பட்டார். (ஐ-10)

## கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்ட சேதங்களைப்பார்வையிட வாஜ்பாய் நேரில் விஜயம்

புதுடில்லி, ஜன. 11

குஜராத் மாநிலத்தில் கிறிஸ்தவ சமூகத்திற்கு எதிராக வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்ற பகுதிகளில்நிலைமைகளைநேரில்கண்டறிவதற்கு பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் நேற்று அங்கு விஜயம் செய்தார்.

பிரதமருடன் மத்திய தொழில்துறை அமைச்சரும் குஜராத் முதலமைச்சர் தேசிபாய் பட்டேலும் உடன் சென்றனர்.

இவர்கள் வன்முறையினால் பாதிக்கப்பட்ட தீப்தர்சன் எனும் மிஷனரிப் பாடசாலை மற்றும் பட்டேல் பாதா, சமீர் ஒல்ரன் ஆகிய கிராமங்களையும் பார்வையிடுவதுடன் உயர் அதிகாரிகளையும் சந்திப்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் குஜராத் மாநிலத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் கன்னியாஸ்திரிகள் தாக்குதலுக்கு உள்ளானது தெரிந்ததே. (ஐ-க)

### பொது மக்களுக்காக

## டயானா நினைவாலயம் ஜூலையில் திறக்கப்படும்

டயானா நினைவாலயம் பொது மக்களுக்காக எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி திறக்கப்பட உள்ளது. அன்றைய தினம் டயானாவின் 38 ஆவது பிறந்த தினமாகும். பின்னர் ஒகஸ்ட் 30 ஆம் திகதி நினைவாலயம் மறுபடியும் மூடப்படும் என்று டயானாவின் சகோதரர் ஏர்ள் ஸ்பென்சர் தெரிவித்தார்.

நினைவாலயத்துக்குச் செல்வதற்கான அனுமதிச் சீட்டுக்கள் விற்பனை தற்போது ஆரம்பமாகி உள்ளது. (ஐ)

# பொறியியல்பீடம் நிறுவ உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்

## துணைவேந்தர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன, 11 யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. அந்தத் திட்டத்தைச் செயன் முறைப் படுத்துவதில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

நேற்று யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே துணைவேந்தர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடத்தை ஆரம்பிப்பதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப் பட்டிருந்தது. ஆனால் இது வரை அதற்கான எந்தவித மான நடவடிக்கையும் எடுக் கப்பட வில்லை.

எனவே மேற்படி பொறியியல் பீடம் அமைக்கும் விடயத்தில் நாடாளுமன்ற உறுப் பினர்கள் கவனம் எடுத்து செயல்படுத்த வேண்டும்.

இவ்விடயம் குறித்து துரித மான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுதல் வேண்டும்.

இப்படி துணைவேந்தர் கேட்டுக்கொண்டார்.

மேற்படி நிகழ்ச்சியில் ஈ.பி.டி. பி யைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவ தாசன் உட்பட அரச அதிகாரிகள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

(இ-7)

# செய்திக் கொத்து

### சாலை முகாமையாளர் ஓய்வு

வடபிராந்திய போக்கு வரத்துச் சபையின் காரை நகர் சாலை (டிப்போ) கடந்த ஒருவருட கால மாக முகாமையாளராக கடமையாற்றியஆறுமுகம்–இராமநாதன் 60வயதைப் பூர்த்தி செய்தமையால் ஓய்வு பெறுகின்றார்.

இவர் கடந்த காலங்களில் நடத்துநராகவும், தட்டெழுத்தாளராகவும் , சாலைப் பரிசோதகராக வும், கடமையாற்றிய பின்னரே காரைநகர் சாலையின் முகாமையா ளராகப் பதவியேற்றார் என்பதுகுறிப்பிடத்தக்கது.

### சங்கக்கிளை வெள்ளிக்கிழமை மூடப்படும

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங் கத்தின் கீழ் இயங்கும் வல் வெட்டித்துறை தெணி யம்பை கிளை இலக்கம் 13 வாரத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் மூடப்படும் என்றும்—

இதற்குப் பதிலாகப் பாவனையாளர்களின் நலன் கருதி ஞாயிற்றுக் கிழமையில் கிளை திறக்கப் படும் என்றும் கிளைக்குழுத் தலைவர் ந. இராமகிருஷ் ணன் தெரிவித்துள்ளார்.

(ஐ-109)

### ஓவியப் போட்டியில் தெரிவு

வடக்கு — கிழக்கு மாகாண கல்வி, பண்பாட் டலுவல்கள் விளையாட் டுத்துறை அமைச்சினால் நடத்தப்பட்ட திறந்த ஓவி யப் போட்டியில் மானிப் பாய் மெமோறியல் ஆங் கிலப் பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் க. ரட் ணேஸ்வரன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள் ளார். [ஐ]

### வீதியில் குழிகள்

கொழும்புத்துறை கிழக் குப் பகுதியில் உள்ள குறுக்கு வீதிகள் குண்டும் குழியுமாகக் காணப்படு கின்றன.

இதனால் பொதுமக்கள் பல சிரமங்களுக்கு ஆளாகவேண்டி உள்ளது.

கடந்த 15 வருடங் களுக்கு மேலாக இக் குறுக்கு வீதிகள் தார் போட்டு செப்பனிடப்பட வில்லை, (ஐ-30)

### கிராமிய வங்கியில், கொடுப்பனவு

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் சேமிப்புக் கணக்கை ஆரம்பித்தவர் களுள் 171 பேருக்கு ஐயா யிரம் ரூபா மீளக்குடிய மர்வுக் கொடுப்பனவு கடந்த வருடம் டிசெம்பர் மாதம் வழங்கப்பட்டிருப் பதாக மேற்படி கிராமிய வங்கியின் முகாமையாளர் திருமதி ந.மகேஸ்வரி தெரிவித்துள்ளார். (101)

### முகாமைத்துவ மண்டபம் புனரமைப்பு

குருநகர், ஜன. 11 போர் அனர்த்தங்களி னால் பாரிய அளவில் சேத மடைந்துள்ள யாழ். கல்வி வலயத்தின் முகாமைத் துவ மண்டபம் 9 இலட்சம் ரூபா செலவில் தற்போது புனரமைக்கப்படுகிறது.

(ஐ-51)

### கல்வித்திட்ட ஆரம்ப விழா

நெல்லியடி, ஜன.11 கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் தரம் ஒன்றில் புதிய கலைத்திட்டத்தைச் செயல்படுத்தும் ஆரம்ப விழா வல்வெட்டி விநாய கர் வித்தியாலயத்தில் கடந்த 7 ஆம் திகதி புதன் கிழமை காலை 8 மணிக்கு அதிபர் சி. சிவச்செல்வம் தலைமையில் நடைபெற் றது.

இவ் வைபவத்தில் இளைப்பாறிய அதிபர் க. வல்லிபுரநாதன் பிரதம விருந்தினராகவும், இளைப் பாறிய ஆசிரியை திருமதி இ. மகேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (ஐ-109)

### தவறணை ஓடுகள் திருட்டு

தென்மராட்சி, ஜன·11 மந்துவில் கள் தவறணை யின் கூரை ஓடுகள் இனந் தெரியாதோரால் அண்மை யில் அபகரித்துச் செல்லப் பட்டுள்ளதாக முறைப் பாடு செய்யப்பட் டுள்ளது. (ஐ-117)

### தவறணையில் சுகாதாரச் சீர்கேடு

அரியாலை, ஜன. 10 ஈச்சமோட்டை கடற் கரை வீதிப்பகுதியில் உள்ள கள் விற்பனை நிலையத் தில் சுகாதாரச் சீர்கேடு கள் உள்ளதாக பாவனை யாளர்கள் முறையிட்டுள்ள னர்.

அண்மையில் அங்கு கள் ஊற்றும் கொள்கலனுக் குள் இருந்து விஷப்பாம்பு ஒன்று மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (–17)

### ஒளிவிழா

தென்மராட்சி, ஜன. 11 தென்மராட்சிப் பிரதேச செயலக ஊழியர் நலன் புரிச் சங்கத்தின் கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஒளிவிழா நிகழ்வுகள் கடந்த மாத இறுதியில் பிரதேச செய லக மண்டபத்தில் சங்கத் தலைவர் செ.முருகையா தலைமையில் நடைபெற் றது.

இந்நிகழ்வில் சாவகச் சேரி 'அசெம்பிளி ஒவ் கோட்' சபையைச் சேர்ந்த பாஸ்டர் ஜேசன் செல்வ ராசா, நுணாவில் தென் இந்திய திருச்சபையைச் சேர்ந்த வண. பிதா ஜே. தேவஅருட்செல்வம் நாற் சதுர சபையைச் சேர்ந்த ஊழியர் உட்பட பலர் கலந்துகொண்டு உரை யாற்றினர். (ஐ-117)

# பாதையை போக்குவரத்துக்குத் திறந்துவிடக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன 11 வேலணை சேர். வைத்தி லிங்கம் துரைசுவாமி மகா வித்தியாலயத்துக்குச் செல் லும் பாதையைப் போக்கு வரத்துக்குக்காகத் திறந்து விடுவதற்குரிய நடவடிக்கை களை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயக மும் நாடாளுமன்ற உறுப் பினருமான டக்ளஸ் தேவா னந்தா மேற்கொண்டு வரு கிறார்.

இந்த வீதியூடாகப் பொது மக்கள் போக்குவரத்தினை மேற்கொள்வதற்குப் படையினர் தடைவிதித்துள்ளனர். இதனால் இப் பாடசாலைக் குச் செல்லும் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் சிரமங் களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பாதையின் அவசியம் குறித்து வேலணை பிரதேச சபைத் தலைவர் ந. கருணா கரமூர்த்தி, ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலை வர் என். மதனராஜன் ஆகி யோர் டக்ளஸ் தேவானந்தா விடம் தொடர்பு கொண்டு வலியுறுத்தினார்கள்.

இதனையடுத்துக் கொழும் பில் உள்ள பாதுகாப்புத் துறை அதிகாரிகளுடன் இப் பாதை திறப்புக் குறித்துத் தொடர்பு கொண்டு நட வடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என்று ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை தற்பொழுது யாழ். நகரில் தங்கி நிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசனும் இது குறித்து இங்குள்ள படை அதி காரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார். (இ-5-7)

# வாள்வெட்டில் ஒருவர் காயம்

நெல்லியடி, ஜன·11 அயல் வீட்டில் ஆடு புகுந் ததினால் ஏற்பட்டதாகக் கூறப்படும் வாய்த்தர்க்கம் வாள் வெட்டில் முடிந்தது.

வல்வெட்டித்துறைப் பகுதி யில் இடம்பெற்ற இச்சம்ப வத்தில் வாள் வெட்டுக்கு இலக்கானவர் ஆபத்தான நிலையில் வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(இ-5-109)

# விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்கள்

## மீண்டும் நிறுவ ஏற்பாடு

விவசாய நுகர்ச்சிப் பொருள் விற்பனைக் கூட்டுற வுச் சங்கங்களை, மீண்டும் நிறுவுவதற்கான ஏற்பாடு களை யாழ். மாவட்டக் கூட் டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு. சண் முகநாதன் மேற்கொண்டுள் ளார்.

இந்த வகையில் உரும்பிரா யில் ஒரு சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப் பட்டுள்ளது.

ஏனைய இடங்களிலும் இதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

முன்பு இச்சங்கங்கள் இயங் கின. இவற்றின் தலைமைச் சங்கமாகச் சமாசமும் இயங் கியது. பின்னர் அவை பதி வழிக்கப்பட்டன.

சில ஆண்டுகளுக்கு முன்பு சமாசம் மீண்டும் உருவாக் கப்பட்டது. ஆனால் கிளைச் சங்கங்கள் அமைக்கப்பட வில்லை.

கிளைச் சங்கங்களை உரு வாக்கும் பணியே இப்போது மேற்கொள்ளப்படுகிறது.

(ஐ-154)


# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்

**வேலணை**
**வைத்திய கலாநிதி**
**சி. இராசரத்தினம்,**
**121, 2 ஆம்**
**குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம்**
**தொலைபேசி எண் 2459**
(62009)


# புதைகுழி மணல்களில்...
## ஓராண்டு



மண்ணில்: 29 – 10 – 1920

விண்ணில்: 11 -- 01 -- 1998

### திருமதி மத்தியூஸ் சவேற்றம்மா
(குருநகர்)
**11–01–1999**

அம்மா... அம்மம்மா,
இறுதிவரை பூபாளமாய்
நிலைத்தவளே
நீ விட்டுச் சென்ற
முகாரிகள்
மௌனமாய் ஓராண்டை
கடந்தனவோ...
நீண்ட மைல்களுக்கப்பால்
தேக்கி வைத்த கண்ணீர்களில்
உன்முகம் காணுகின்றோம்.

இறுதி நாள்களில்
நீ ஸ்பரிசித்த
சுவாசங்களில்
நாமும் எமது இல்லமும்
பசுமையானதை அறியாயோ.
உன் புதை குழி மணல்களை
கண்களில் ஒத்த வைத்து
எங்கே பேனாய் சடுதியாக
உன் முகவரியே சொல்லாது.

உங்கள ஆன்ம சாந்திக்காக பிராத்திக்கும் பேரப்பிள்ளைகள்
F. A. நியூமன் (பொபி- நோர்வே)
F. A. ஆம்ஸ் ரோங் (ரின்லி - ரஷ்யா)
F. ஜீன்மேரி (சுகந்தி - யாழ். பல்கலைக்கழகம்)

இல. 11, சென் ஜேம்ஸ் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(62041)

# மரக்கறி, உணவுப்பொருள் விலை வன்னிப் பகுதியில் அதிகரிப்பு

வவுனியா, ஜன. 11

வன்னியில் மழை வெள்ளம் காரணமாக மரக்கறி மற்றும் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேங்காய்க்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவதனால் சந்தைகளில் உடைத்த பாதி தேங்காய்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

உடைத்த பாதி தேங்காய் 12 ரூபா முதல் 15 ரூபாவரை விற்பனை செய்யப்படுகிறது.

கிலோ 6 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட கத்தரிக்காய் 60 ரூபாவுக்கும், கோவா 80 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதுடன் ஒரு போத்தல் மண்ணெண்ணெயின் விலை நூறு ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5-7)

# தராசுகள், படிகளுக்கு முத்திரையிடும் பணி

யாழ். செயலக நிறுவைகள், அளவைகள் திணைக்களம், நிறுவைகள், அளவைகள் மற்றும் நிறுக்கும் கருவிகள் ஆகியனவற்றைப் பரிசோதித்து முத்திரையிடும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

கடந்த 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப்பணி சனி, ஞாயிறு விடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படும்.

சகல வர்த்தகர்களும் இந் நாள்களில் தராசுகளுக்கு தவறாது முத்திரையிடும்படி யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சந்தைகள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களும் தவறாது தமது தராசுகளை பரிசோதிப்பித்து முத்திரை இடும்படி யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-15)

# ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தினால் யாழ். நகரில் கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜன. 11

ஐ. நா. அபிவிருத்தி திட்டத்தினால் யாழ். மீள்குடியேற்ற மீள அமைப்பு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் யாழ். நகரில் கணனி பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

கணனித்துறையில் நிபுணத்துவம் பெற்ற இருவரை கொழும்பிலிருந்து வரவழைத்து யாழ்ப்பாணத்திலிருந்து கணனி பயிற்சிபெற்றவர்களுக்கு குறுகிய கால விசேட பயிற்சி வழங்கவும்—

இப்படி பயிற்சி பெற்றவர்கள மூலம் யாழ்ப்பாணத்தில் கணனித்துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கும் — திட்டமிடப்பட்டுள்ளது.

கிராமப் புறங்களில் வறுமைக் கோட்டின் கீழ்வாழும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இந்த பயிற்சி வழங்கப்படும்.

தொடர்ந்து கட்டம் கட்டமாக இப்பயிற்சியை நடத்துவதற்கு ஐ. நா. அபிவிருத்தி திட்டம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கணனிப் பயிற்சி நிலையத்தை ஆரம்பிக்கும் பொருட்டு யாழ். ஆஸ்பத்திரியில் கட்டடம்ஒன்றும் பெறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5

# மல்லாகம் நீதிமன்றப் பகுதி துப்புரவு செய்யப்படுகிறது

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற வளாகத்திலுள்ள மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகள் ஆகியவற்றை அகற்றும் நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதுவரையும் 43 மிதிவெடிகள் இந்த வளாகத்தில் படையினரால் மீட்கப்பட்டு செயலிழக்கச்செய்யப்பட்டன.

தற்பொழுது யாழ். பிரதான வீதியில் இயங்கிவரும் மல்லாகம் நீதிமன்றத்தை மீண்டும் மல்லாகத்தில் இயங்கச் செய்யும் பொருட்டே இந்நீதிமன்ற வளாகம் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# இடர்காலக் கொடுப்பனவு

உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு இடர்கால கொடுப்பனவு நாளை முதல் வழங்கப்படவிருக்கின்றது.

1997 ஆம் வருடத்தின் மூன்று மாத காலப்பகுதிக்கான இடர் காலக் கொடுப்பனவே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக, மேற்படி சங்க பொது முகாமையாளர் தெரிவித்தார். (ஐ-109)

# விளையாட்டு மைதானத்தை விரிவாக்கும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்குப் பின்புறமாக அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தை விரிவாக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முதற்படியாக மைதான வளவுக்குள் உள்ள கண்ணிவெடிகளை அகற்றும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் —

தொடர்ந்து மைதானவளவில் உள்ள மரம், செடிகள் அகற்றப்படவுள்ளதாகவும் —

மழைகாலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து கிரிக்கெட் மற்றும் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு இந்த மைதானம் பெருமளவில் பயன்படுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டு 540 பேருக்கு கைத்தொழிற் பயிற்சி

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் 540 பேருக்குதொழிற்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இயந்திரவியல், மின்சாரம் உட்பட பலதுறைகளில் தொழில் நிறுவனங்கள் மூலம் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தொழில் நிறுவனங்களில் பயிற்சி பெற விரும்புவோரும் பயிற்சியாளர்களைச் சேர்த்துக்கொள்ள விரும்பும் தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களும் மேற்படி சபையின் மாகாண முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு சபையினால் ஊக்குவிப்புப்படி வழங்கப்படவுள்ளது.

இதேவேளை கடந்த வருடம் இச்சபையினால் 500 பேருக்கு தொழிற் பயிற்சி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சஞ்சிகை வெளியீடு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மாணவரின் வெளியீடான 'இளஞாயிறு' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஒட்லி பண்டபத்தில் பிரதி அதிபர் செல்வி எஸ். பி. குலசிங்கம் தலைமையில் இடம்பெறும். (158)

# தமிழ்த்துறை தலைவர்

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராக கலாநிதி எஸ். சிவலிங்கராஜா கடந்த முதலாம் திகதி முதல் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் கிறிஸ்தவ, இஸ்லாமியத்துறைகளில் தலைவராகவும் கடமையாற்றியவர். (இ-7)

# கணனி முறையினால் தொழில் நுட்பம் விருத்தி

## ஒன்று கூடலில் உரை

தென்மராட்சி, ஜன. 11

இருபத்தோராம் நூற்றாண்டை நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் உலகம் முழுவதும் கணனி மயமாக்கப்பட்டுவிட்டது. அதனால் தொழில் முறைகளை கண நேரத்தில் செய்யக் கூடியதாக தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்றுள்ளது.

புத்தகக் கல்வி, விரிவுரை முறைகள் ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டு தொழில் கல்வி, செய்முறைக் கல்வி ஆகியவை கல்விக் கூடங்களில் கட்டாயப்படுத்தப்படல் வேண்டும். அப்போது தான் உலக நாடுகளின் விஞ்ஞான வள்ர்ச்சியை எட்டிப்பிடிக்க முடியும்.

இவ்வாறு மீசாலை அண்ணா அறிவாலய ஆண்டு 11 மாணவர்களின் ஒன்று கூடல் வைபவத்தில்முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய அதிபர் கு. சிவானந்தம் தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் வித்தியாலய முன்னாள் அதிபர் அ. பொ. செல்லையா உட்பட பலர் உரையாற்றினர். (இ-117)

# வடமராட்சிக்கு புதிய ஜெனரேட்டர்

நெல்லியடி, ஜன. 11

வடமராட்சிப் பகுதியிலுள்ள கலிகைச் சந்தியில் புதிய ஜெனறேற்றர் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபையினால் இணைக்கப்பட்டிருக்கும் இந்த ஜெனறேற்றர் மூலம், சாவகச்சேரி வீதி, கொடிகாமம் வீதிகளுக்குஇவ்வாரம் முதல் மின்சார விநியோகம் வழங்கப்படவிருக்கின்றது. (ஐ-109)


## வாழ்த்துகின்றோம்

யாழ். விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தரும், நலன்புரிச் சங்கத்தின் அங்கத்தவருமாகிய

**திரு. வைரமுத்து செல்வநாயகம்**

நீதி, அரசமைப்பு, இனவிவகார அமைச்சினால் யாழ். மாவட்டத்தின் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையையிட்டு மனதார வாழ்த்தி, அவரது சேவை மென்மேலும் பெருக இறைவனை வேண்டுகின்றோம்.

யாழ் விலை மதிப்பீட்டு திணைக்கள
உத்தியோகத்தர்களும், நலன்புரிச் சங்கமும்.

(62039)



## கலாலய பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

### மகளிருக்கான டிப்ளோமா மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

- **கேக் ஐஸிங்** (பட்டர் ஐஸிங், றோயல் ஐஸிங், பாச்மென்ட் ஐஸிங், புறோஸ்றிங் ஐஸிங், Fondant Icing மற்றும் மாச்சினி அலங்காரம்)
- **உணவு தயாரித்தல்** (கீழைத்தேச, மேலைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள், புடிங்வகைகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், சூப் வகைகள் தயாரித்தல் இத்துடன் உணவை அலங்கரிக்கும் முறை, மரக்கறிகளைக் குடைந்து உருவங்கள் செய்தல், மேசை அலங்காரம், உணவு பரிமாறும் விதம்)
- **உடை தயாரித்தல்** (குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள், கதிரை விரிப்பு, தலையணை உறை தைத்தல், பூப்போடுதல்)
- **பூ வேலை** (ஸ்ரொக்கிநெற், டிப் இன் மலர்கள், Panclay மலர்கள், பேப்பர் றிபன் மலர்கள், துணியினால் மலர்கள், மலர்ச்செண்டுகள் ( Bouquete ) செய்தல்)
- **கை வேலை** (பேப்பர் அலங்காரம், Soft Toys, வைக்கோல் வேலை, கழிவுத்துணி வேலை, கம்பளி நூல் வேலை)

ஆகிய பயிற்சிகள் பயிற்றுவிக்கப்படும். மேற்படி பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம் வகுப்புகள் நடைபெறும்.

★ பயிற்சிக் காலம் 6 மாதம்
★ பயிற்சியின் முடிவில் டிப்ளோமா தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
★ இப் பயிற்சிக்கு வயதெல்லை கிடையாது.
★ கிழமை நாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை நடைபெறும்.
★ சனி, ஞாயிறு பயிற்சிகள் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.30 வரை நடைபெறும்.

**கிழமை நாள் புதிய வகுப்புகள் ஆரம்பம்: 18 - 01 - 99**
**சனி, ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 23 - 01 - 99**

❋ மேலும் விவரங்களுக்கு நேரில் வரவும்.

இயக்குநர்.

(சி/6087)

# உதயன்

## விரைந்து செயற்படுக!

செம்மணியில் மனித புதைகுழிகள் இருப்பதாகத் தகவல் வெளியிடப்பட்டு ஆறு மாதங்களும் ஐந்து நாள்களும் சென்ற பின்னரே, புதைகுழிகளைத் தோண்டுவதற்கு அனுமதி கோரி யாழ்ப்பாண நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது!

கிருஷாந்தி கொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச, படையினரால் கொல்லப்பட்ட குடாநாட்டுத் தமிழர்களின் சடலங்கள் நூற்றுக்கணக்கில் போட்டு மூடப்பட்ட புதைகுழிகள் செம்மணியில் இருப்பதாகக் கடந்த வருடம் ஜுலை மாதம் நீதிமன்றத்தில்தெரிவித்திருந்தார்.

அவரைப் பொலீஸாரும், மனித உரிமை ஆணைக் குழுவினரும் விசாரணை செய்த வேளை, தமது தகவல் உண்மையே என்று அவர் உறுதி செய்தார். எனினும் புதைகுழிகள் இருப்பதாகச் சொல்லப்பட்ட பிரதேசத்தை அகழ்ந்து உண்மையைக் கண்டறிவதற்கான உருப்படியான, உகந்த நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்படவில்லை.

கொலைகள் நடைபெற்று அனேகமாக சுமார் இரண்டு வருடங்கள் கழிந்த பின்னரே அது பற்றிய தகவல் வெளியானது. புதைகுழிகளை அகழ்ந்து உண்மையை அறிவதற்கு அப்போதே காலம் பிந்திவிட்டதாகக் கருதப்பட்டது. ஆனால் அரசுதரப்பு மேலும் ஆறு மாதங்களைக் கடத்திவிட்டு, இப்போது தான் அதற்கான ஆரம்ப நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது

தகவல் வெளியான வேளையிலும் அதற்குப் பிந்திய நான்கு மாதங்களும் செம்மணிப் பிரதேசத்தில்— குடாநாட்டில் — பெரிதாக மழை பெய்யவில்லை. ஆனால் கடந்த டிசெம்பர் மாதத்தில் பெரு மழை தொடர்ச்சியாகப் பெய்ததால் பல இடங்களில் பெரும் வெள்ளப் பெருக்கு உண்டானது. தாழ்ந்த பகுதிகளில் இன்னமும் வெள்ளம் தேங்கியுள்ளது; செம்மணியும் அவற்றில் ஒன்று.

அரசாங்கம் — பொலீஸார் — மழை பெய்யும் வரை காத்திருந்து நீதிமன்ற அனுமதிக்கு இப்போது விண்ணப்பித்திருப்பது மக்கள் மத்தியில் பல சந்தேகங்களை உருவாக்கும். இடைப்பட்ட ஆறு மாதகாலத்தில் தடை செய்யப்பட்ட பகுதியான செம்மணியில் என்னென்ன நடந்திருக்குமோ என்ற சந்தேகம் ஏற்கனவே பரவலாக உண்டு.

எப்படியோ, புதைகுழிகள் உரிய முறைப்படி, தகுந்தவர்களின் பிரசன்னத்தில் தோண்டப்பட வேண்டும்; உண்மை கண்டறியப்பட வேண்டும்; புதைக்கப்பட்டவர்கள் யார் யார் என்பது இனங்காணப்பட வேண்டும் என்பதே குடாநாட்டு மக்களின் விருப்பம் — நிலைப்பாடு.

அரசு இனிமேலாவது, இவ்விடயத்தில் அக்கறையுடனும், விரைந்தும், சோரப்போடாமலும் செயற்பட வேண்டும். இல்லையேல் இப்போதைய நடவடிக்கை, தேர்தல் காலத்தில் தென்னிலங்கையில் எதிர்க்கட்சிகளின் 'வாயை அடைப்பதற்கான' ஏற்பாடாகவே கருதப்படும்.

# மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவை திடீரென உயர்த்திய தேங்காய் விலையேற்றம்

குடாநாட்டில் தேங்காய் விலை ஏற்றத்தினால் ஒவ்வொரு குடும்பமும் நாளாந்தம் பாதிக்கப்பட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. அநேகர் சந்தையில் உடைத்த பாதித் தேங்காய்களை வாங்கிச் செல்வதைக் காண முடிகின்றது.

நாளாந்தம் உணவுத் தேவையில் முக்கிய பங்கு வகிப்பது தேங்காய். அதனை என்றுமில்லாதவாறு கூடிய விலைகொடுத்து வாங்கவேண்டிய நிலை தற்போது ஏற்பட்டிருக்கிறது. கஷ்டப்படுபவர்கள் அனேகர் நாளாந்தம் உழைத்து அதன் மூலம் வாழ்க்கையை ஓட்டுபவர்கள்.

தனது ஊதியத்தில் அரைவாசி நாளாந்தம் தேங்காய்க்கே போய்விடுவதாக நாளாந்தம் உழைத்து சீவியத்தினை ஓட்டும் ஒரு தொழிலாளி கவலையுடன்கூறினார்.

தேங்காய் விலையேற்றத்தின் காரணமாக தேங்காய் பால்மா பைக்கட் தற்போது மக்களிடம் புழக்கத்துக்கு வந்துள்ளது. ஆனாலும் இப்பால் மாவின் விலையோ ஆமை வேகத்தில் இருந்து குதிரை வேகத்தில் உயர்ந்து வருகின்றது.

அண்மையில் 95 ரூபாவாக விற்ற தேங்காய் பால்மா படிப்படியாக 120 ரூபாவரை உயர்வடைந்துள்ளது.

### தென்னை அழிவு

கடந்த காலங்களில் போரினால் தென்னை மரங்கள் தறிக்கப்பட்டமை, அழிக்கப்பட்டமை, மக்கள் போக முடியாத பகுதிகளில் தென்னந் தோட்டங்கள் சிக்கியுள்ளமை, தேங்காய்களைக் கொண்டுவர இராணுவ அனுமதி இன்மை, உரிய முறையில் தோட்டங்களைப் பண்படுத்த முடியாத நிலை ஏற்பட்டமை, மழை இன்மை மரங்களில் இருந்து இளம் காய்களாகத் தேங்காய்கள் பறிக்கப்பட்டமை ஆகிய காரணங்களாலேயே தேங்காய்களின் உற்பத்தி குறைந்தது. இதன் காரணமாகவே என்றுமில்வாதவாறு தேங்காய் விலையேறியுள்ளது.

**செய்தி மடல்**

யுத்தத்தினால் தென்னை மரங்கள் தறிக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் உள்ளன. இதில் கூடிய தென்னை மரங்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் அழிக்கப்பட்டுள்ளன. பெரியளவிலான தென்னைச் செய்கை இப் பிரதேசத்திலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது. அரச, தனியாருக்கான தென்னந் தோட்டங்கள் உள்ள பிரதேசம் இதுவாகும்.

அழிவிற்குள்ளான மரங்களை நிவாத்தி செய்ய புதிதாக தென்னங் கன்றுகள் நடுவதன் மூலமே எதிர் காலத்திலாவது இவ் விலையேற்றத்தினைத் தடுக்க முடியும். இதன் பொருட்டு விரைவில் 25 ஆயிரம் தென்னம் நாற்றுக்களை கமநல சேவைத் திணைக்களம் பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்கு

**பொ. இராஜேஸ்வரன்**
வலி–கிழக்கு
செய்தியாளர்

வழங்க துரித நடவடிக்கை மேற் கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்றது.

குறுகிய கால உயர் நிலை விதைகள் இதற்கென கொழும்பில் இருந்து கொண்டு வரப்படவுள்ளன.

இச் செயற்றிட்டம் நடைமுறைக்கு வந்ததும் நிலங்களைச் செப்பனிட்டு உரம் இட்டு பராமரிப்பது முக்கியம். இச் செயற்பாடுகளைக் கடந்த காலத்தில் உரிய முறையில் செய்ய முடியாமல் போனதும் விலையேற்றத்துக்கு ஒரு காரணம் ஆகும்.

'பிள்ளையைப் பெற்றால் கண்ணீரு. தென்னை வளர்த்தால் இளநீரு' என்று தென்னையை வளர்ப்பது பிள்ளையை வளர்ப்பது மாதிரியே என்கிறது ஒரு சினிமாப் பாடல் வரி.

உரிய காலத்தில் உரிய முறைப்படி தென்னை மரங்களைப் பராமரித்தல் மிக முக்கியம் மற்றையது தென்னைகளுக்கு மழையும் ஒரு முக்கிய காரணம். உரிய காலத்தில் மழை வராவிட்டால் தென்னை மட்டுமல்ல விவசாயம் கூட பாதிப்புறும். கடந்த காலத்தில் மழையின் பங்களிப்பும் தென்னைகளுக்கு இல்லை எனலாம்.

மற்றும் ஒரு விடயம் இங்கு உள்ளது. பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் இன்றும் சில தென்னந் தோட்டங்களுக்கு மக்கள் செல்ல முடியாது உள்ளது. இங்கு மக்கள் சென்றால் தானே அங்குள்ள தென்னை மரங்களைப் பராமரிக்கவோ, பாதுகாக்கவோ முடியும். சில இடங்களில் தேங்காய்களை உரியவர்கள் குறிப்பிட்ட அளவுக்கு மேல் கொண்டுவர அனுமதியில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலைக்கு மக்கள் என்ன செய்ய முடியும் என்ற நிலை.

தோட்டங்களில் திருடர்கள் இளம் தேங்காய்களைப் பிடுங்குவதன் காரணமாகவும் இளம் தேங்காய்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் இத்தகைய திருட்டு முயற்சிகளும் தடுக்கப்பட வேண்டும். ✶

# பளைப் பகுதியில் பாவனை இன்றி மீதமாகும் பனங்கள் ஊற்றப்படுகிறது

தென்மராட்சி, ஜன. 11

பளைப் பிரதேச கள் தவறணைகளில் விற்பனையாகாமல் தேங்கும் பெருமளவு பனங்கள் தினமும் நிலத்தில் ஊற்றப்படுகிறது.

பனங்கள்ளின் உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும் குறைந்த அளவு கள்ளே விற்பனையாவதால் மீதமாகும் கள் நிலத்தில் ஊற்றப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பெருமளவு கள் விற்பனையாகாமல் மீதமாவதால் கள் உற்பத்தியின் அளவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் சீவல் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இக் காலப்பகுதியில் ஆயிரக்கணக்கான போத்தல் கள் தினமும் சாராய வடிசாலைகளுக்கு அனுப்பப்பட்டு வந்தன. தென்மராட்சிப் பிரிவுக்கென கைதடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வடிசாலையின் வேலைகள் இன்னமும் பூர்த்தியாகாததால் கள்ளினைச் சேமிக்க முடியாததால் அது நிலத்தில் ஊற்றப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கள் உற்பத்தி அளவு மட்டுப்படுத்தப்பட்டதால் சட்டவிரோதமாக கள் விற்போரின் எண்ணிக்கையும் அதிகரித்தது. தவறணைகளில் கள் விற்பனை வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## கலை, இலக்கிய வளர்ச்சியில் அரசியல் தலையீட்டுக்கு எதிர்ப்பு

### திரைக் கலைச் சங்கம்

கொழும்பு, ஜன. 11

இலங்கையில் சகல இனங்களுக்கும் தமது கலை, இலக்கிய வளர்ச்சியில் அரசியல் தலையீடின்றி செயற்படும் சுதந்திரம் வேண்டும்.

'சலன சித்திர' சங்கத்தின் 2 ஆவது மாநாடு கடந்த முதலாம் திகதி மருதானை சமய சமூக மண்டபத்தில் நிறுவன தலைவர் க. தேவதாசன் தலைமையில் கூடிய போது மேற்படி தீர்மானம் சபையோரால் நிறைவேற்றப் பட்டது.

இலங்கையில் தொடரும் இக் கொடிய யுத்தம் பேரழிவுக்கும், சீரழிவுக்கும் காரணமாக இருப்பதால் இந்த யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் பின்வரும் தீர்மானங்களும் சபையோரால் நிறைவேற்றப்பட்டன.

★ தமிழ்ச் சினிமா வளர அரசு நிபந்தனையற்ற உதவி தரவேண்டும்.

★ தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபையில் (தமிழ் சினிமா) தமிழ்ப் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

★ தேசிய திரைப்படக்கூட்டுத் தாபனத்துடன் மும்மொழிகளில் தொடர்பு கொள்ளத்தக்க விதமாக மும்மொழிப் பிரயோகத்தை அரசு உடன் அமுலாக்க வேண்டும்.

★ பாடசாலைகளில் திரைக்கலைச் சங்கங்களை நிறுவி இயக்கிவர அரசு அனுமதித்து உதவியும் வழங்க வேண்டும்.

★ இலங்கைச் சினிமாப் படங்கள் மற்றும் கலை, இலக்கியப் படைப்புக்களை இந்தியாவில் சந்தைப்படுத்த அரசு அனுமதி பெற்றுத்தர வேண்டும். (ஐ-8)

### நாளை

மார்கழி 28

செவ்வாய்க்கிழமை

திதி: தசமி
பிற்பகல்: 3.25 வரை.
நட்சத்திரம்: விசாகம்
பின்னிரவு 02.18 வரை.
சுபநேரம்: 11.03 -12.33
ராகுகாலம்: 3.33-5.03
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

இன் சொல் உமது இனிய வாழ்க்கை.
பொறுமைஉமதுஆஸ்தி.
நேர்மை உமது வெற்றி.
கோபம் உமது சத்துரு.
உழைப்புஉமது உயர்வு.
அமைதி உமது ஆறுதல்.
—பாம்பாட்டிச் சித்தர்.

## ஆலயத்தில் பூசை

நெடுந்தீவு, ஜன. 11

வேலணை மண்கும்பான் வெள்ளைப் புற்றனை ஸ்ரீவிக்னேஸ்வரன் ஆலயத்தில் கடந்த எட்டு வருடங்களின் பின் எதிர்வரும் பொங்கல் தினத்தன்று பொங்கல் விசேட பூசைகளும் ஆராதனைகளும் நடைபெறவுள்ளன.

(ஐ-111)

## பளை ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ்

ஐந்து வருடஇடை வெளிக்குப்பின்னர் பளை ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்று வந்துள்ளது.

(ஐ-117)

## இருவர் கிணற்றுக்குப் பலி

தென்மராட்சி, ஜன. 11

மழை வெள்ளத்தினால் நிறைந்திருந்த கிணறுகளில் தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவரும், வயோதிபப் பெண்மணியும் பலியான வெவ்வேறு சம்பவங்கள் கடந்த வெள்ளியன்று இடம்பெற்றன.

மழை வெள்ளத்தினால் மூடப்பட்டிருந்த வீதியால் நடந்துவந்த வேளை வீதியின் அருகே நீர் நிறைந்திருந்த கிணற்றில் தவறி வீழ்ந்து கைதடி மேற்கைச் சேர்ந்த குமரேசன் வைத்திலிங்கம் (வயது 48) என்பவரும்—

காலையில் முகம் கழுவுவதற்காக கிணற்றடிக்குச் சென்ற மூதாட்டியான மட்டுவில் மத்தியைச் சேர்ந்த சிவகுரு அன்னம்மா (வயது 72) கிணறில் தவறி வீழ்ந்தும் மரணமானவர்களாவர்.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தர்மேந்திரர் சம்பவங்கள் நடந்த இடங்களுக்குச் சென்று விசாரணை நடத்தி நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட விபத்து மரணங்கள் எனத் தீர்ப்பளித்தார்.

(ஐ-117)

## விலை வீழ்ச்சி

திருநெல்வேலிச் சந்தையில் மரவள்ளிக்கிழங்கு, கரணைக் கிழங்கு, கரட் ஆகியவற்றின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

மரவள்ளி, கரட், கரணை ஆகியன அதிகளவில் சந்தைக்கு வருவதாலேயே இந் நிலை ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். எனினும் பச்சைமிளகாய், பம்பாய் வெங்காயம், லீக்ஸ் உட்பட மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

(ஐ-ரீ)

## புனரமைப்பு

நெல்லியடி, ஜன. 11

சுமார் 4 இலட்சம் ரூபா செலவில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் நூலகக் கட்டடம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (ஐ-109)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 5½' உயரமுள்ள பெரிய 'கெல்வினேற்றா' குளிர்சாதனப் பெட்டி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: யூட் பேர்ட்டி, 390, பருத்தித்துறை வீதி, (வீரமாகாளி கோயில் அருகில்) நல்லூர். (62055)

### தவறிவிட்டது

சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் வீதியைச் சேர்ந்த இ. கருணாகரன் என்பவருடைய விசேட அடையாள அட்டையும் (091007439), திணைக்கள அடையாள அட்டையும், யாழ்ப்பாணத்திற்கும், சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (62060)

மீசாலை வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த ந. ஶ்ரீ நடேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை இல. 611153038V, விசேட அடையாள அட்டை என்பன சாவகச்சேரிக்கும், மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மீசாலை சந்திரன் தேநீர்ச் சாலையுடன் தொடர்பு கொள்ளவும். (62061)

கவிதா தங்கராஜா என்பவருடைய தேசிய அடையாள அட்டை 08-01-99 அன்று நெல்லியடி மகாத்மா வீதிக்கும், அல்வாய் பாரதிதாசன் நூலகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உரிய முகவரிக்கு அல்லதுமொடேன் புத்தகசாலை, நெல்லியடி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (62072)

### ENGLISH, MATHS

O/L, ஆண்டு 10, புதிய பாடத்திட்டத்திற்கு ஆண்டு 6 9, G.A.Q (Spoken English) ஆகியன கற்பிக்கப்படும். ஆசிரியர்: 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (62063)

### யாழ்ப்பாணம்

1. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள், இடம் பெயர்வின் கதை. வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவினர்களுக்கு அனுப்புங்கள். 2. யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளைஎழுதியவை ரூபா 50 (61862)

### திருமண சேவை

சகல நிலைகளிலும் மணமக்கள் தேர்வுக்கு கடித மூலமும், தினமும் 3.30 — 5.30, சனி, ஞாயிறுகளில் 8.00 — 3-00 வரை நேரிலும் தொடர்பு கொள்ளலாம். சேவை நம்பகம். வைமன் வீதி, நல்லூர். (61879)

## பிரச்சினைகளை அறியக்குழு

நெடுந்தீவு, ஜன. 11

எழுவைதீவு மக்களின் அத்தியாவசிய பிரச்சினைகள் குறித்து அவர்களுடன் நேரடியாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் பொருட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜன் தலைமையில் சபை உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று நாளை செவ்வாய்க் கிழமை எழுவை தீவுக்குச் செல்லவுள்ளது. (ஐ-111)

# தமிழ்மொழி தினப் போட்டிகள்; மார்ச் மாதம் பாடசாலை மட்டத்தில்

வலிகாமம் தெற்கு, ஜன 11

அகில இலங்கைத் தமிழ் மொழித் தினப்போட்டிகள் வழமை போல இவ்வருடமும் நடைபெறவுள்ளன. இதற்கான ஒழுங்குகளை மாகாணக் கல்வி அமைச்சின் தமிழ் மொழிப்பிரிவு மேற்கொண்டுள்ளது.

கல்வி உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் இ. யோகநாதன் மாகாண கல்வி அமைச்சினூடாக வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு தமிழ்மொழித் தினப் போட்டிகளை நடத்துமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் விபுலானந்த அடிகளின் நினைவு தினமான ஜூலை 19 ஆம் திகதி நடைபெற உள்ளது.

தமிழ்மொழித்தினபோட்டிகள் யாவும் பாடசாலை மட்டம், வலய மட்டம், மாகாணமட்டம், தேசிய மட்டம் என்ற நிலைகளில் நடைபெற உள்ளன.

பாடசாலை மட்டப் போட்டிகள் யாவும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்பும்—

வலயமட்டப் போட்டிகள் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பும் —

மாகாணமட்டப் போட்டிகள் ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பும் நடைபெற உள்ளன.

எழுத்தாக்கப் போட்டிகளுடன் இன்னும் சில போட்டிகள் தேசிய நிலையில் ஜூலை முதல் வாரத்தில் நடைபெறும்.

தேசிய நிலைப் போட்டிகளுக்கான விண்ணப்பங்களை ஜூன் 25 ஆம் திகதிக்கு முன் மாகாண கல்விப்பணிப்பாளர்களூடாக கல்வி உயர்கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவுப் பிரதிக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

தமிழ்த்தின போட்டிகள் யாவும் ஆறு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

அவை வருமாறு;–

★ 4, 5 ஆம் தரங்கள் முதலாம் பிரிவு.

★ 6, 7 ஆம் தரங்கள் இரண்டாம் பிரிவு.

★ 8, 9 ஆம் தரங்கள் மூன்றாம் பிரிவு.

★ 10, 11 ஆம் தரங்கள் நான்காம் பிரிவு.

★ 12, 13 ஆம் தரங்கள் ஐந்தாம் பிரிவு.

மாணவர்கள் பங்கு பற்றக்கூடிய வகையிலும், தரக் கட்டுப்பாடின்றியும் திறந்த போட்டிப் பிரிவாக ஆறாவது பிரிவு நடைபெறும்.

வாசிப்பு, எழுத்து, கட்டுரை, நாடகம், கவிதை, பேச்சு, பாவோதல், இசை நடனம், இலக்கிய நாடகம், வில்லுப்பாட்டு, விவாதம், வினாவிடைப் போட்டி என சுமார் 22 போட்டிகள் நடைபெற உள்ளன. (ஐ-152)

## புளியங்கூடல் பகுதியில் தையற் பயிற்சி நிலையம்

நெடுந்தீவு, ஜன. 11

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வடக்கு—கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் 1999 ஆம் ஆண்டிற்கான புளியங் கூடல் தையற் பயிற்சி நிலையம் கடந்த 6 ஆம் திகதி புதன் கிழமை திறந்து வைக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் கே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கா. பாலகிருஷ்ணன் நிலையத்தைத் திறந்துவைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக வேலணை உதவி அரசாங்க அதிபர் எஸ். இரத்தினம், பிரதேசசபை செயலாளர் கு. கணேசலிங்கம், புளியங்கூடல் மாதர் சங்கத்தலைவி செல்வி பாமினி பாலச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-111)

## வெள்ள அழிவுகளின் விவரம் சேகரிப்பு

மூளாய், ஜன. 11

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது.

அண்மையில் பெய்த கடும் மழை, வெள்ளம் காரணமாக உடைமைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து கிராம சேவை உத்தியோகத்தர்கள் மூலமாக விவரம் திரட்டப்படுகிறது, சேதம் ஏற்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ - 99)

## ஒப்படையை ஒப்படைக்கக் கோரிக்கை

கொக்குவில், ஜன. 11

யாழ். திறந்த பல்கலைக் கழகத்தில் பட்ட மேற் கல்வி டிப்ளோமா (ஈ. எஸ். டி— 1308) கற்கும் மாணவர்களை 'மாணவர்கள் பொருத்தப்பாடும், ஆலோசனை கூறலும்' எனும் பாடப்பகுதிக்கான ஒப்படையை நாளை மறுதினம் புதன்கிழமைக்கு முன்னதாக அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும்—

முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவாகியுள்ள மாணவர்களை இத் திகதிக்கு முன்னதாக அலுவலகத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும்—

திறந்த பல்கலைக்கழக பிராந்திய இயக்குனர் ச. ஆ. ஞானேந்திரன் கேட்டுள்ளார். (ஐ-?)

## கால்கோள் விழா

வலிகாமம் தெற்கு, ஜன. 11

கல்வி மறுசீரமைப்புத்திட்டத்தின் கீழ் தரம் ஒன்றுக்கான கற்பித்தல் செயற்பாட்டை ஆரம்பிக்கும் கால்கோள் விழா வலிகாமம் கல்வி வலயத்தில் இணுவில் மத்திய கல்லூரியில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்றது.

பாடசாலை அதிபர் துரை எங்கரசு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வலிகாமம் வலயப் பிரிவு இரண்டின் உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

முதலாம் தர மாணவர்களுக்கு இரண்டாம் தர மாணவர்கள் இனிப்புகளை வழங்கி வரவேற்று வகுப்பறைக்கு அழைத்துச் சென்றனர்.

இவ் விழாவில் பிள்ளைகளின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். (ஐ-152)

## தியாகராஜ உற்சவம்

வலிகாமம் தெற்கு, ஜன. 11

யாழ். பாரதி கான சபாவினால் கடந்த புதன்கிழமை (6-1-99) தியாகராஜ உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

வயலின் வித்துவான் பிரம்மஶ்ரீ எஸ். சர்வேஸ்வர சர்மாவின் இல்லத்தில் உற்சவ விழா இடம்பெற்றது.

உற்சவவிழாவின் போது விசேட தெய்வீக ஆராதனையுடன் பஞ்சரத்தின கீர்த்தனையும் நடைபெற்றது.

இளம் கலைஞர்களும், சங்கீத வித்துவான்களும் இணைந்து இசைக்கச்சேரிகள் நடத்தினர்.

சிவஶ்ரீ தா. மகாதேவக் குருக்களின் ஆசியுரையும், பிரம்மஶ்ரீ ந. வீரமணி ஐயரின் சிறப்புரையும் இடம் பெற்றன. (ஐ-152)

## முன்பள்ளி ஆரம்பம்

குருநகர், ஜன. 11

குருநகர் சனசமூக நிலையத்தில் அமைந்துள்ள சேவை முன்பள்ளி பாடசாலை இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. (ஐ-51)

## மோட்ஷ தீபப் பிரார்த்தனை



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 22 — 10 — 1930 | 27 — 12 — 1998 |

### கந்தசாமி இரத்தினசபாபதி ஐயர்

(தர்மகர்த்தா, கோண்டாவில் மேற்கு முத்தட்டி மடம் ஞானவைரவர் தேவஸ்தானம்)

வீரசைவ மரபைப்பேணி வியனுலகில்
வேத விதிக் கிரமமாகப் பக்தியோடு
ஊரதுவாம் கோண்டாவில் மேற்கில் உறை
உலர் ஞான வைரவர்க்குப் பூஜை செய்த
சீரெழில்சேர் இரத்தினசபாபதி ஐயரும்
சிவபதத்தைச் சேர்ந்தனரே மோட்ஷதீபம்
பேரொளியாய் சிவபதத்தில் ஜோதியாகப்
பேரின்பச் சாந்தி பெறப் பிரார்த்திப்போமே!

அன்னாரின் மோட்ஷதீப கிரியைகள் 11- 01- 99 திங்கள் காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை கோண்டாவில் மேற்கு முத்தட்டிமடம் ஞானவைரவர் கோயிலில் நடைபெறும்.

த. ரமேஷ்
(மருமகன்)

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (62065)


## COMPUTER POINT
(TRAINING DIVISION)

COMPUTER POINT TRAINING DIVISION

REGD. NO. J / DS / BR / 63 / 97

**NO. 28, ST. PATRICK'S RD., JAFFNA.**

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

17 - 01 - 99, 19 - 01 - 99 TIME: 10. 00 A. M.

- BEGINNER'S COMPUTER STUDIES. (Computer Programming In Basic Language)
- DIPLOMA IN COMPUTER STUDIES.
- CERTIFICATE COURSES:

LECTURES BY:

**MR. S. R. LOGENDRA**

(D. C. A) Systems Analyst M. C. S (India)

★ ஆண்டு 9, 10 வகுப்பு மாணவர்களுக்கான பிரத்தியேக கணனி வகுப்புகள் அறிமுகப்படுத்த உள்ளோம்.

★ G. C. E. O/L, A/L, பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிவோரின் நன்மை கருதி விசேட கணனி வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன.

★ அனைத்து வகுப்புகளும் வார நாள்கள், சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

★ விண்ணப்பப்படிவத்தைப் பெற்று அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

(62071) - நிர்வாகி

# ஆயுதப் போராட்டத்தின் மூலம் தீர்வு காணும் உணர்வை ஏற்படுத்தியவர்

## சிவகுமாரன் சிலை அடிக்கல் விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜன. 11

மாணவர்களுக்கு எதிரான தரப்படுத்தலை ஆயுதப் போராட்டத்தின் மூலம் நிறுத்தமுடியும் என்ற உணர்வை மாணவர் மத்தியில் நிலைநாட்டிய முதற் போராளி பொன் சிவகுமாரன் ஆவார்.

யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் மேற்கண்டவாறு கூறினார்.

உரும்பிராய்ச் சந்தியில் நேற்று நடந்த பொன். சிவகுமாரனின் சிலை அடிக்கல் நடும் விழாவில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தீர்மானத்துக்கு ஏற்ப ஈ. பி. டி. பி. அமைப்பால் உரும்பிராய்ச் சந்தியில் பொன். சிவகுமாரனின் வெண்கலச் சிலை அமைப்பதற்காக அடிக்கல் நடும் வைபவம் வலி - கிழக்கு பிரதேசசபைத் தலைவர் பூ. குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

சிவதாசன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

மாணவர் சமூகத்தின் கல்வி சார் நிலையிலிருந்து தரப்படுத்தலை நிறுத்த வேண்டும் என்கிற அரசுக்கெதிரான மாணவர் போராட்டத்தை வளர்த்த பெருமையும்பொன். சிவகுமாரனையே சாரும்.

பொன். சிவகுமாரனுக்கு இதுவரை நான்கு தடவைகள் சிலைகள் எழுப்பியும் இனப்பிரச்சினை காரணமாகஅவை சிதைக்கப்பட்டன. தற்போது அமைக்கப்படும் சிலைக்கு முழுமையான பாதுகாப்பு இருக்கும்.

இப்படி அவர் கூறினார்.

யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி. அமைப்பாளரும் யாழ். மாநகரசபை உறுப்பினருமாகிய வி. கே. குகேந்திரன் (ஜெகன்) பேசுகையில் கூறியதாவது:—

தமிழ் மக்கள் பட்டுவரும் இன்னல்களிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகிய மக்களின் தலைவர்கள் எடுத்த விடாமுயற்சியின் பலனாக இன்று மறைந்த அண்ணன் பொன். சிவகுமாரனின் சிலை அடிக்கல் நடும் விழாவை சிறிதளவிலாவது செய்து முடித்து அதன் திறப்பு விழாவினை சிறப்பாக, விமரிசையாகச் செய்யவிருக்கிறோம்

இச்சிலையை வெண்கலத்தினால் செய்து தருவதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமுமாகிய கே. என். டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

வலி கிழக்குப் பிரதேசசபை ஈ.பி.டி.பியின்கட்டுப்பாட்டில் உள்ளபடியினால் அண்ணன் பொன். சிவகுமாரனின் சிலையினை நாமே அமைக்க முன்வந்தோம்.

இவ்வாறானசிலைகளையோ தூபிகளையோ அரசு சேதப்படுத்தமாட்டாது இது குறித்து பாதுகாப்பு வட்டாரங்களுடன் கலந்தாலோசிக்கவிருக்கிறோம்—என்றார்.

பொன். சிவகுமாரனின் சகோதரர் பொன். அரியரட்ணம் பேசுகையில் எத்தனையோ தடவைகள் சிதைக்கப்பட்ட இச்சிலை இனிமேல் நிலையான சிலையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த வைபவத்தில் வலிகாமம் கிழக்கு பிரதேசசபை உபதலைவர் என். சிவராசா, பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், நல்லூர் பிரதேசசபை உபதலைவர் தியாகராஜா ராஜ்குமார், நீர்வேலி ப. நோ. கூ. சங்கத் தலைவர் கிருஷ்ணராசா மற்றும் அச்சுவேலி ஈ. பி. டி. பி. அமைப்பாளரும் கரவெட்டிப் பிரதேசசபை உறுப்பினருமாகிய சிஸ்வேஸ்ஸெரி அலட்ன் டின்யூட், இருபாலை ஈ. பி. டி. பி. அமைப்பாளர் ரவி, மற்றும் பாடசாலை மாணவிகள் பெருந்திரளான பொது மக்கள் கலந்து கொண்டனர். (இ-3)

## பொன் விழா

யாழ்ப்பாணம், ஜன. 11

பனிப்புலம் அம்பாள் சனசமூக நிலையத்தின் பொன் விழா நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

ஈ. பி. டி. பியைச் சேர்ந்த வலி. மேற்கு பிரதேசசபைத் தலைவர் ந. திரிலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மாணவர்கள் கலந்து கொண்ட நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் விசேடமாக இடம் பெற்றன. (இ-7)

# ரெலிகொம் ஊழியர் சங்க தலைவருக்கு பயமுறுத்தல்

கொழும்பு, ஜன 11

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவன ஊழியர் சங்கத் தலைவர் பிரேமரத்ன அல்விஸுக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் அவரது தனிமுல்ல — கம்பொல வீதியில் உள்ள வீட்டில் இடம்பெற்றது.

சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது:-

சம்பவதினம் அவரது வீட்டினுள் நுழைந்த ஆயுதம் தாங்கிய இரு நபர்கள தாம் கொண்டுவந்த கைத் துப்பாக்கியினால் அவரது தலையில் அடித்தனர்.

இதனைக் கண்ட அவரது புதல்வர் உடனடியாகத் தனது தந்தையை அறை ஒன்றினுள் அழைத்துச் சென்றதையடுத்து துப்பாக்கி நபர்கள் தாம் கொண்டுவந்த குண்டு ஒன்றை வீட்டின் நடுப்பகுதியில் வீசிவிட்டுத் தப்பியோடினர். (இ-7)

# ரூ. 2 லட்சம் செலவில் வகுப்பறைகள் திருத்தம்

தென்மராட்சி, ஜன. 11

கெற்பலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வகுப்பறைகள் இரண்டு இலட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் இதற்கான நிதி வழங்கப்பட்டதாக பாடசாலை அதிபர் சி. சின்னராசா தெரிவித்தார்.

மேலும் பாடசாலையில் மூன்று சல கூடங்களும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (இ-117)

# வெள்ளம் வழிந்தோடாது தேக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 11

சுண்டுக்குளி நொய்யாத் தோட்டம், ஈச்சமோட்டைப் பகுதிகளில் வெள்ளம் வழிந்தோடாது தேங்கி நிற்பதால் அப்பகுதியில் சுகாதாரத்துக்கு கேடு ஏற்பட்டுள்ளது

வடிகால்கள் குப்பை கூழங்களால் நிரம்பி இருப்பதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடிகால்களில் தேங்கி நிற்கும் வெள்ளம் மற்றும் கழிவுப் பொருள்களின் கலப்பால் துர்நாற்றம் வீசுவதாகவும் —

நுளம்பின் பெருக்கம் அதிகரித்திருப்பதாகவும் —

நீர்ச்சிரங்கு பலருக்கு ஏற்பட்டிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது. (இ-15)

# பதிவை மேற் கொள்ள அறிவுறுத்து!

இராமநாதன் நுண்கலைப் பிரிவில் புதிய அனுமதிக்கான பதிவை மேற்கொள்ளத் தவறியவர்கள் தமது பதிவை உடனடியாக மேற்கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக பதிவாளர் கேட்டுள்ளார். (இ-க)

# மாணவர் பகிஷ்கரிப்பு சமரசமாக தீர்க்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். நகரில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் மாணவர்கள் மேற்கொண்ட பகிஷ்கரிப்பு சமரசமாகத் தீர்க்கப்பட்டது.

புதிதாக ஆரம்பமாகும் உயர்தர வகுப்புக்கான மாதாந்தக் கட்டணத்தை இரட்டிப்பாக்கியமை தொடர்பாக மாணவர்கள் மேற்கொண்டு வந்த பகிஷ்கரிப்புப் போராட்டம் மாணவர் பிரதிநிதிகளுக்கும், நிறுவன ஆசிரியர்களுக்கும் இடையில் நடந்த கலந்துரையாடலையடுத்து கைவிடப்பட்டுள்ளது.

இருதரப்புக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டதையடுத்து பாதிக்கப்பட்டிருந்த வகுப்புக்கள் நேற்று மீள ஆரம்பிக்கப்பட்டன. (இ-3-5-6-139)

# விவேகானந்தர் தேசிய இளைஞர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 11

சுவாமி விவேகானந்தரின் தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு இடம்பெறும் விசேட நிகழ்ச்சி ஒன்று இன்று 11 ஆம் திகதி கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் அதிபர் க. அம்பலவாணர் தலைமையில் நடைபெறும்.

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் இந்நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு இலவச கொப்பிகளும் வழங்கப்படவுள்ளன. (இ-7)

# வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் அடிப்படை வசதியின்றி பெரும் கஷ்டம்

யாழ்ப்பாணம், ஜன. 11

வன்னிப்பகுதியில் அண்மையில் இடம்பெயர்ந்த மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகிறார்கள்.

இவ்வாறு சமீபத்தில் வன்னிப் பகுதிக்குச்சென்று திரும்பிய ஒருவர் தெரிவித்தார்.

தமது வன்னிப் பயணம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த 3 ஆம் திகதி வன்னிப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட சூரிய சக்தி இராணுவ நடவடிக்கையினால் ஒட்டுசுட்டானுக்கு அண்மையில் உள்ள கூழாமுறிப்பு, கற்சிலைமடு, முத்தையன்கட்டு, முள்ளியவளை ஆகிய கிராமங்களிலிருந்து ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு மேற்பட்ட 14 ஆயிரம் பேர்இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு போன்ற இடங்களிலுள்ள பாடசாலைகளில் தஞ்சமடைந்தனர்.

இவர்கள் தமது கையில் கிடைத்த பொருள்களுடனும் தட்டுமுட்டுச் சாமான்களுடனும் கால் நடையாக இடம் பெயர்ந்து சென்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து சென்று வன்னியில் தங்கி இருந்தவர்களில் பலரே மீண்டும் இடம் பெயர்ந்தனர்.

இவர்கள் இடம் பெயர்ந்திருந்தபோது ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சை ஆரம்பமாகி விட்டதால் பகலில் பாடசாலைகளில் இருக்க முடியாத நிலை ஏற்பட்டது. அதனால் பகலில் மரங்களின் கீழும் (பாடசாலைகளுக்கு வெளியில்) இரவில் பாடசாலைகளிலும் தங்கியிருந்தனர்.

சடும்மழையின் மத்தியிலும் இவர்கள் இவ்வாறு மோசமான நிலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இதேவேளைஒட்டுசுட்டான் மற்றும் இராணுவம் நிலைகொண்டிருந்த மக்கள் இடம்பெயர்ந்து வாழும் பகுதிகளை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பாடசாலைகளில் பரீட்சை எழுதிக் கொண்டிருந்த மாணவர்கள் ஷெல் வந்து விழுந்து விடுமோ என்ற பீதியுடன் பரீட்சையை எழுதிக் கொண்டிருந்தனர்.

வன்னிப்பகுதியிலுள்ள வீதிகள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு மேடும் பள்ளமுமாக இருக்கின்றன.

முறிகண்டிஅமைதிபுரத்திலிருந்து 55மைல்தூரத்திலுள்ள மடுவுக்குச் செல்வதற்கு ஆறு மணித்தியாலங்கள் தேவைப்பட்டன.

வன்னிப்பகுதியிலுள்ள பாடசாலைகளில் காலை நேரப் பிரார்த்தனையின் போது சிலசமயம் மாணவ, மாணவிகள் மயக்கம் போட்டு விழுகின்றனர். காலையில் உணவு உட்கொள்ளாமல் பாடசாலைக்கு வருவதாலேயே இவர்கள் மயக்கமடைந்து விழுவதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சியிலிருந்த கட்டடங்கள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. எங்கும் காடு மண்டிக் காணப்படுகிறது. நகரப் பகுதியில் மட்டும் ஒரு சில கட்டடங்களைக் காணக் கூடியதாக இருக்கிறது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)


யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம்

பொங்கி வரும் இசை வெள்ளம்

லீட்ஸ் இன்ஸ்ரியூட்
சிற்றி ரெக்ஸ் அன் ரெயிலர்ஸ் - மாருதி ரெக்ஸ்
நிறுவனங்களின் ஆதரவில்
யாழ். லயன்ஸ் கழக
நலிவுற்றோர் நல நிதிக்காக
யாழ்ப்பாணத்தின் பிரபலகலைஞர்களும்
யாழ். பல்கலைக்கழக மாணவர்களும்
முதன் முறையாக இணைந்து வழங்கும்

இசை நிகழ்ச்சிகள்

இடம்: கைலாசபதி கலையரங்கு
(யாழ். பல்கலைக்கழகம்)
காலம்: 17 - 01 - 99 ஞாயிற்றுக்கிழமை
காலை நிகழ்வு 10 மணி மாலை நிகழ்வு 2-30 மணி
அன்பளிப்பு: 500/-, 250/-

ரிக்கட் கிடைக்குமிடங்கள்:
சிற்றி ரெக்ஸ் அன் ரெயிலறிங்
73, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
மாருதி ரெக்ஸ்
01 பஜார் வீதி, யாழ்ப்பாணம்.
லீட்ஸ் இன்ஸ்ரியூட்
இல. 58, கே. கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

விளம்பர அன்பளிப்பு:-
நல்லி சில்க்ஸ்
121, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/6104)

### மண்சரிவில்...

(முதலாம் பக்கத் தொடர்)
காயங்களுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மேற்படி மலைச்சாரல் பகுதியில் வசிக்கும் குடும்பங்கள் உடனடியாக அப்பகுதியில் இருந்து வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. (இ-7)

### வாக்களிப்பை...

(முதலாம் பக்கத் தொடர்)
வாக்களிப்பையடுத்து அங்கு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை என்றும் —

ஊரடங்கு அனுமதி அட்டைகள் அச்சிடப்பட்டு அந்த மாகாணத்திலுள்ள பொலீஸ் நிலையங்களுக்குப் பாதுகாப்பு அமைச்சால் அனுப்பப்பட்டுள்ளன என்றும் — தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் — பாதுகாப்புப் பணிக்காக ஆறாயிரம் பொலீஸார் அங்கு பணிக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3)

## ஜேர்மன் தொழில்நுட்பநிறுவன உதவியுடன்
# சண்டிலிப்பாய் செயலர் பிரிவில்
# 100 வீடுகள் புனரமைக்கப்படும்

வட்டுக்கோட்டை, ஜன. 11

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் 100 வீடுகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இது தொடர்பான ஆரம்ப வைபவம் ஒன்று அண்மையில் மேற்படி பிரதேச செயலர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

இந்த வைபவத்தில் மாதகல் கிழக்கு, சில்லாலை தெற்கு மற்றும் பிரான்பற்று, பெரியவிளான ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 100 பேருக்கு தலா ஓர் இலட்சம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை மேற்படி வீடமைப்புத் திட்டத்தை செயற்படுத்தவுள்ள கிராம உத்தியோகத்தர்கள், சம்பந்தப்பட்ட கிராமங்களின் இணைப்பாளர்கள் ஆகியோருக்கான பயிற்சிக் கருத்தரங்கு எதிர் வரும் வியாழக்கிழமை காலை 8-30 மணிக்கு மேற்படி பிரதேச செயலகத்தில் இடம் பெறவுள்ளது. (இ-7-12)

# முதல் கட்ட கொடுப்பனவு ரூ. 5,000 வழங்கப்பட்டது

வட்டுக்கோட்டை, ஜன. 11

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்காக முதற்கட்டக் கொடுப்பனவாக ரூபா ஐயாயிரம் 156 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாதாந்த வருமானம் ரூபா ஆயிரத்து ஐந்நூறுக்குக் குறைவாகப் பெறும் குடும்பங்களில் முதற்கட்டமாக இப்பணம் வழங்கப்பட்டுள்ளது.

ஏனையோருக்கான கொடுப்பனவுகளை வங்கி கணக்குகளினூடாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் —

முதற்கட்ட கொடுப்பனவு பெற்றவர்களின் வேலை முன்னேற்ற தொழில் நுட்ப அறிக்கை மதிப்பீடுகள் பெறப்பட்டு இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-12)

### விவசாய உபகரணம்

வலிகாமம் மேற்குப் பிரதேசச் செயலர் பிரிவைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ஒரு தொகுதி விவசாய உபகரணங்களை இலவசமாக வழங்க உணவு விவசாய ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

மேற்படி பகுதியில் உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடனேயே விவசாய உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் —

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் இருந்து தெரிவு செய்யப்படுபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இவை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கட்டடம் புனரமைப்பு

வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலகத்தில் அமைந்துள்ள இலவச சித்த ஆயுர்வேத வைத்திய சாலைக் கட்டடம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி கட்டடப் புனரமைப்புக்கென வடமாகாண மீள்குடியேற்ற, புனர்வாழ்வு அதிகார சபை சுமார் 3 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
வெள்ளி விழா ஆண்டு
1998-10-06 தொடக்கம் 1999-10-06 வரை
வெள்ளி விழாக் கொண்டாடும்
யாழ். பல்கலைக்கழகத்தை
வாழ்த்துகிறோம்
வி.கே. இராசரெத்தினம்
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/60 57)


### மண்டேலாவின்...

(முதலாம் பக்கத் தொடர்)
டாளராகப் பணியாற்றலாம் என்று தெரிவித்திருந்தார்.

இரு தரப்பினரிடமிருந்தும் காட்டப்பட்ட சமிக்ஞைகளை அடுத்தே மத்தியஸ்தம் வகிக்கும் விருப்பத்தை உலக நாடுகள் பல தெரிவித்திருந்தன.

தென் ஆபிரிக்காவின் மத்தியஸ்தவிருப்பத்தைஇலங்கை அரசு ஏற்றுக் கொண்டதை அடுத்து தென் ஆபிரிக்க வெளிவிவகார அமைச்சர் ஆரம்ப ஏற்பாடுகளுக்காக விரைவில் இலங்கை வர இருப்பதாகவும் —

தென் ஆபிரிக்க அரசு விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனுக்கு இது தொடர்பான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாகவும் மேலும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

# வலி.மேற்குப் பகுதியில் மீனவருக்கு உதவி திட்டம்

மூளாய், ஜன. 11

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்களுக்கான உதவித்திட்டம் ஒன்றை உணவு விவசாய ஸ்தாபனம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

இந்த ஆண்டுக்கான மேற்படி நிறுவனத்தின் உதவித் திட்டத்தில் பயன் பெறத் தகுதியான மீனவர்களது விவரம் வலி.மேற்கு பிரதேச செயலகத்தால் தற்போது சேகரிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீன்பிடி முறைகளுக்கு ஏற்பவும் மற்றும் புவியியல் அம்சங்களுக்கு ஏற்பவும் பயன்படுத்துவதற்குச்சாதகமான கடற்றொழில் உபகரணங்களை மீனவர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது,

இதற்கான ஏற்பாடுகளை இப்பகுதியில் செயற்படும் கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்து பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகிறது. (இ-9)

### ஒரே சூலில் 3 கன்றுகள்

ஒரே சூலில் மூன்று கன்றுகளைப் பசுமாடு ஒன்று ஈன்ற சம்பவம் புலோப்பளையில் இடம்பெற்றது.

பிறந்த இரண்டு மணித்தியாலத்தில் ஒரு கன்று இறந்துவிட்டதாகவும் ஏனைய இரண்டு கன்றுகளும் சுகமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ். சுரேஸ் என்பவரின் வீட்டிலேயே இச்சம்பவம் இடம் பெற்றது. (இ-117)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் றக்கா வீதியை தற்சமயம் வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை (10 — 01 — 99) ஞாயிற்றுக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை — பொன்னாச்சியின் அன்பு மகனும், சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, புண்ணியவதி (ஓய்வு பெற்ற ஆசிரியை), நகுலாம்பிகை, ராஜேஸ்வரி, நல்லராசா (லண்டன்), கருணாதேவி, சகுந்தலாதேவி (சுருக்கெழுத்தாளர், துறைமுக கூட்டுத்தாபனம்), நேசடாலிங்தேவி (தாதிய உத்தியோகத்தர், தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை) ஆகியோரின்அன்புத் தந்தையும், ஐயம்பிள்ளை(வர்த்தகர்), காலஞ்சென்ற ஜெயபாலன் (முகாமையாளர்), ஐயாத்துரை, குபேந்திரம், விக்கினேஸ்வரி, ஜீவானந்தம் (உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்), சண்முகேஸ்வரன் (சுருக்கெழுத்தாளர், துறைமுகக் கூட்டுத்தாபனம்), உதயநாதன் (பரிசாரகர், ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாந்தினி, சற்குணேஸ்வரன் (சுவிஸ்), சாந்தசீலன் (இத்தாலி), சுகந்தி (கனடா), சாலினி (சுவிஸ்), குமுதினி (சுவிஸ்), லவகுமார் (கனடா), சுகந்தன் (இந்தியா), முகுந்தன் (லண்டன்), ஜயந்தன், சுஜிதினி, சுபாஜினி, ராதிகா, ஆரணி, கிருஷ்னி, தாரணி, விஷதா, துளக்ஷன், அக்ஷயா, மிதுஜா, தனுஷாந்த், பானுஜா, தக்ஷயா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், சஜித், சௌமியா, ஒவியா ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 12-01-99 செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அ. உதயநாதன்
(மருமகன்)
(அப்பன்)

24, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (62 081)


பெண்கள்
விரும்பிக் கேட்கும்
125/-
பாதணி
வந்துள்ளது.
கணபதி சூ பலஸ்
159, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(769 மினிபஸ்
(தரிப்பிடத்திற்கு அருகில்)
(62075)



மேலும் ஒரு பிரிவு
ஆரம்பம்: 16-01-1999
OXFORD
English
Academy
by: Mr. B. JOTHY
B.Com. (Hons)
நெல்லியடியில்
10-30 a.m
அனுமதியை
Maths Centreஇல் பெறவும்.
பருத்தித்துறையில்:
ஆலடிப் பிள்ளையார் வீதி,
சுப்பர்மடம்.
3-00 p.m
★ அனுமதியை முன் கூட்டியே பெறவும்.
(62035)


### பஸ் ஊழியர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)
செய்துள்ளார்.

இடர்காலக் கொடுப்பனவு வழங்கவேண்டும் என்று கோரி வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட எடுத்த முடிவு குறித்தும் —

யாழ். சிவில் நிர்வாக இணைப்பதிகாரி ரி. ஜீ. திலகரத்தினா இவ்விடயத்தில் தலையிட்டதையடுத்து அந்தப் போராட்டம் பிற்போடப்பட்டமை குறித்தும் —

கொழும்பு சென்றுள்ள வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவருக்கு விளக்கிக் கூறினார்.

இதைத் தொடர்ந்து இந்தக் கொடுப்பனவு வழங்க வேண்டிய அவசியம் குறித்து அவர் போக்குவரத்து அமைச்சுச் செயலாளருக்கு சிபார்சு செய்துள்ளார்.

இந்தச் சிபார்சு அமைச்சரவையின் அனுமதி பெற்ற பின்பே கொடுப்பனவு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### நினைவாலயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)
பாளர் செ. கிருபைராஜா, தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் சுந்தையன், ஈ. பி. ஆர். எல். எவ். சார்பில் கங்காரெலோ அமைப்பின் சார்பில் எஸ். சந்திரசேகரம் மற்றும் உயிரிழந்த பொதுமக்களின் உறவினர்கள்ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர்

இந்த நிகழ்வுக்கு முன்பாக கன்னாதிட்டி காளியம்மன் கோயிலில் மத வழிபாடு இடம்பெற்றது.

நேற்று மாலை 5 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் உரையாற்றினர். (இ-3-6)

### ராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்)
இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டதாகவும்—

இதைத் தொடர்ந்து அந்தப்படையணி வைபவத்துக்கு பாதுகாப்பு அளிப்பதை வாபஸ் பெற்றாதகவும்— ஈ. பி. டி. பி. வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

படையணியின் பாதுகாப்பு இன்றி வைபவம் நடந்ததாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

(இந்த வைபவம் தொடர்பான செய்தி 9 ஆம் பக்கத்தில்) (இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11-01-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.